விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

GTV Express Parcel.lk
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்
மகாராஜா பொதிகள் சேவை
11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
பிரான்ஸ் Rs.2000/= அவுஸ்திரேலியா Rs.1700/= இத்தாலி Rs.2250/=
(C-3430)
இல.25, கந்தசாமி கோவில் சாலை, வவுனியா
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
www.gtve.com | 011 4 654 444

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 220 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 11 ஞாயிற்றுக்கிழமை (27.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# 11 மனித எச்சங்கள் ஒரே நாளில் அடையாளம்

## 101 எலும்புக்கூடுகள் இனங்காணப்பட்டன



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று ஒரே நாளில் 11 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு இதுவரை 101 எலும்புக்கூடுகள் முழுமையாக இது வரை இனங்காணப்பட்டுள்ளன.

(04ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பில்

## ஐ.நா அலுவலகம் முன் போராட்டம்




23ஆம் பக்கம் பார்க்க

நல்லூர்த் திருவிழாவுக்கு

## பொலிஸ் பாதுகாப்புடன் மணல் விநியோகம்



23ஆம் பக்கம் பார்க்க

## நாடு முழுவதும் சுற்றிவளைப்பு

### 1,455 பேர் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 1,455 பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சோதனை நடவடிக்கை 23ஆம் பக்கம் பார்க்க

## தமிழின அழிப்புக்கு சர்வதேச நீதி கோரி தமிழர் தாயகத்தில் கவனயீர்ப்புப் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாக தமிழ் மக்கள் மீது திட்டமிடப்பட்ட வகையில் நடத்தப்பட்டு வரும் இன அழிப்பிற்கு சர்வதேச நீதி கோரிய போராட்டமானது நேற்றைய தினம் வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் இடம்பெற்றுள்ளது.

**யாழ்ப்பாணம்**

இன அழிப்பிற்கு சர்வ 23ஆம் பக்கம் பார்க்க



## தையிட்டி விகாரையை அகற்றுவதே அங்கு நிலவும் பிரச்சினைக்கான தீர்வு

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

தையிட்டி விகாரையை அகற்றுவதே அப்பகுதியில் நிலவும் பிரச்சினைக்கான தீர்வு என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சட்டவிரோதமாக இராணுவத்தினர் இந்த விகாரையை நிர்மாணித்தமை இன நல்லிணக்கத்துக்கு பாதகமா? அல்லது விகாரை இல்லாத ஓர் இடத்தில் 23ஆம் பக்கம் பார்க்க

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஏற்கக்கூடிய நீதி வேண்டும்

### சிறீதரன் எம்.பி கோரிக்கை

(கிளிநொச்சி )

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச ரீதியிலே பாதிக்கப்பட்ட சமூகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நீதி கிடைக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை முன் வைத்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட 04ஆம் பக்கம் பார்க்க








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடிகளில் ஈடுபட்டோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது இடைநிறுத்தப்படமாட்டாது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (25) ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யாரும் முகம் பார்த்து கைது செய்யப்படுவதில்லை. மத்துகமவில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்ததன் காரணமாகவே ஜகத் விதானகேயின் மகன் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கின்றனர். அவர் மீதான விசாரணைகள் கடந்த இரு மாதங்களுக்கு முன்னரே ஆரம்பமாகிவிட்டன. அந்த விசாரணைகளுக்கமையவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். நீதிமன்ற மற்றும் பொலிஸ் விசாரணைகளில் எந்த வகையிலும் அரசியல் தலையீடு இல்லை.

கைது செய்யப்படும் எந்தவொரு நபரும் தாம் குற்றமற்றவர் என்பதை நீதிமன்றத்தில் நிரூபித்துக் கொள்ள முடியும். கடந்த சில வாரங்களாக உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைத்த போது எதிர்க்கட்சிகள் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் எந்தவிதக் கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை.

இதனால் அக் காலப்பகுதியில் அமைதியான சூழல் காணப்பட்டது. அதன் பின்னர் சிலகாலம் கொள்கலன் விடுவிப்பு தொடர்பில் பேசிக் கொண்டிருந்தனர்.

தற்போது அதை விடுத்து மீண்டும் தேசிய பாது காப்புத் தொடர்பில் பேசத் தொடங்கியுள்ளனர். அரசாங்கத்தின் மீது எவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டோருக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சட்டம் நடை முறைப்படுத்தப்படும். நாட்டிலுள்ளவர்கள் மாத்திரமின்றி வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றவர்களும் கைது செய்யப்படுவர்.

இந்தச் செயற்பாடுகளுடன் கடந்த கால அரசியல், பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் என ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுள்ளது. அரச பொறிமுறையின் சில கட்டமைப்புக்களும் இவற்றில் தொடர்புபட்டுள்ளன. அதற்கமைய பொலிஸ், புலனாய்வுப்பிரிவு, நீதித்துறையைச் சார்ந்தவர்களும் கைது செய்யப்படலாம். எனவே இது சாதாரண விடயமல்ல. இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் போது எதிர்க்கட்சிகள் அதிலும் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கலாம்.

ஆனால் நாம் அவற்றில் கவனத்தைச் செலுத்தாமல் எமது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம். ஜனாதிபதி பதவியேற்று 9 மாதங்கள் கடந்துள்ளன. 9 மாதங்கள் என்ற குறுகிய காலத்துக்குள் பொருளாதாரத்தை ஸ்திரத்தன்மைக்குக் கொண்டு வந்துள்ளோம். சர்வதேச நிறுவனங்களும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளன. அந்நியச் செலாவணி அதிகரித்துள்ளதோடு, வெளிநாட்டு முதலீட்டாளர்களும் வர ஆரம்பித்துள்ளனர். இவை கடந்த அரசாங்கங்களில் காண்பிக்கப்பட்டதைப் போன்று கண் காட்சிகள் அல்ல என்றார்.

(ம-7)


## வீடு விற்பனைக்கு

2 வரவேற்பறைகள், 5 அறைகள், ஒரு சாப்பாட்டு அறை, ஒரு சமையல் அறை, 2 குளியல் அறைகள் மற்றும் கிணற்றுடன் கூடிய 3 பரப்பிலுள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

* அருணோதயா, மகாஜனக் கல்லூரி வலயம், கும்பளாவளை துர்க்கை அம்மன் மற்றும் அழகொல்லை கோயிலுக்கு கிட்டிய தூரத்தில் உள்ளது.
* பலாலி சர்வதேச விமான நிலையம், K.K.S பயணிகள் துறை என்பவற்றிற்கு 8 km தூரத்தில் உள்ளது.

தொடர்புகளுக்கு

077 756 3745

(4909)

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் Event Management நிறுவனத்தில் ஆண் வேலையாட்கள் தேவை.

சம்பளம் : 45.000/= - 50.000/=

இடம் : கந்தர்மடம்

OT + EPF

தொடர்பு :


077 775 0318

(4911)


## மரண அறிவித்தல்

பிறப்பு 09 - 01 - 1953

இறப்பு 25 - 07 - 2025



### கதிர்காமு இராசகோபால்

குடத்தனை மேற்கைப் பிறப்பிடமாகவும் அல்வாய் திக்கத்தை வசிப்பிடமாகவும் திக்கம் மானான்டி கடை முதலாளியும் ஆகிய கதிர்காமு இராசகோபால் அவர்கள் 25.07.2025 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தியாகராசா - இரத்தினம் ஆகியோரின் மருமகனும் தேவறஞ்சினியின் அன்புக்கணவரும் திருமகள்(பிரான்ஸ்), தனுஜா, பாரதி ஆகியோரின் அன்புத் தந்தையும் துஷ்யந்தன்(அமரர்), ரமேஸ், வாகீசன் ஆகியோரின் மாமனாரும் நிதுஷன், அஜீவா, அட்சயன், ஆருத்ரா, நிலோஜன், ஆதீசன், அனோஜன், நிகிலன் ஆகியோரின் அன்புப் பேரனும் இராசம்மா, செல்வரத்தினம், இலட்சுமிப்பிள்ளை, இராமச்சந்திரன் (லண்டன்), இராசநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.07.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
077 550 3405

(1369)

CELEBRATING
the *life* of



Miss.Sarojinithevi Tharmalingam
(Ret Teacher & Deputy Principal, Vembadi Girls' High School, Jaffna)

03.04.1937 - 24.06.2025

*Sunday 27 July 2025* | *At 3.30 to 5 pm*

**Trimmer Hall**
Vembadi Road, Jaffna

*A Memorable documentary of the teacher will be screened at this event*

VOGA Jaffna

(C-3510)


## வேலைவாய்ப்பு

தேசிய, அபிவிருத்தி றிக்கட் விற்பனைக் கூண்டில் விற்பனை செய்ய விற்பனையாளர்கள் கொக்குவில், இணுவில், திருநெல்வேலி ஆகிய இடங்களிற்குத் தேவை.

தொடர்பு :

076 185 2241

(4912)

## அறைகள் வாடகைக்கு

யாழ்.பல்கலைக்கு அருகாமையில் இராமநாதன் வீதியில் பெண்களுக்கான அறைகள் மாத வாடகை அடிப்படையில் வழங்கப்படும்.

077 208 7778

(4908)

## வீட்டு வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைகளைச் செய்வதற்கு அனுபவமுள்ள பெண்கள் விரும்பத்தக்கது.

சம்பளம் : 100,000/=

35 வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது

077 258 5564

(1372)

## தேவை

TATA Xenon 2.7

விலைக்குத் தேவை

077 736 1215
076 423 7053


(1368)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 75 ஆவது பிறந்ததின வாழ்த்துக்களும், சேவைநலன் பாராட்டுக்களும்!

## பிரம்ம ஸ்ரீ.சி.ஜெயானந்த சர்மா

### (பிரதம குரு,மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானம்)



**வாழ்க்கைக் குறிப்பு**

- **பிறந்த திகதி- 05.07.1950**
- **பிறந்த கிராமம்:- கண்டிவீதி, புங்கங்குளம், அரியாலை**
- **பெற்றோர்:- தந்தை :- சிவஸ்ரீ ச.சிவகடாட்சக்குருக்கள் (அராலி)**
- **தாய்:- கோமதி அம்மா (இந்தியா)**
- **சகோதரர்கள்:- பெண்கள்-06, ஆண்கள் -02 (ஒருவர் மரணம்)**
- **இவர் குடும்பத்தில் நான்காவது பிள்ளை**
- **மனைவி:- வனஜாம்பாள் (மூளாய்)**
- **பிள்ளைகள் :- வதனா, ஸ்ரீவித்தியா, கோமதி**
- **பேரப்பிள்ளைகள் :-03+03+03= 09**

- **மேலதிகக் குறிப்புக்கள்**
  மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் பிரதம குருக்களான அமரர்.சிவஸ்ரீ.கு.பாலசுப்பிரமணியக்குருக்கள் அவர்களால் 1971 இல் ஆலய நித்திய பூசகராக நியமிக்கப்பட்டார். குருக்கள் ஐயா 1976 இல் இறைவனடி சேர்ந்த போது அவரது பாரியார் திருமதி.பா.சாரதாம்பாள் அவர்களின் நிர்வாக வழிகாட்டலில் 1995 வரை பூசைகளை மேற்கொண்டார். 1995 இல் திருமதி.மா. சாரதாம்பாள் இறைவனடி சேர்ந்ததிலிருந்து இன்று வரை ஆலயத்தின் பிரதம குருவாகக் கடமை புரிகின்றார். மேலதிகமாக மூளாயில் ஐயனார் கோவில், காளிகோயில் பூசைப் பொறுப்புக்களை மேற்கொண்டு, இன்னொரு குடும்பம் வாழ வேண்டு மென்பதற்காகத் தனது பாரியாரின் சகோதரி குடும்பத்திற்கு ஐயனார் கோயில் பூசைப் பொறுப்புக்களை வழங்கினார்.
- வீடுகளில் புரோகிதக் காரியங்களைச் செய்தாலும் மங்கள காரியங்களில் கணிசமான தொகை அன்பளிப்பு, கஷ்டப்பட்டவர்களிடம் திவச தட்சணை பெற்றாலும் ஒரு ரூபாய் சில்லறைக் காசை எடுத்துவிட்டு அவர்கள் தந்த தட்சணையுடன் தானும் ஒரு தொகை போட்டு, தானிருந்த இருக்கைக்குக் கீழ் சத்தமில்லாமல் வைத்துவரும் வள்ளல்.
- நோய்வாய்ப்பட்டவர், வறியவர்களுக்கு பண உதவி செய்வார்.
- மண்பற்று, தமிழ்ப்பற்று மிகுந்தவர்.
- 1987 இல் தவறுதலான தகவல் அடிப்படையில் இந்திய இராணுவம் தோலுரிய ரத்தம் வர அடித்தாலும், இன்று வரை கோயிலை விட்டு ஓடாது நிலைத்து நிற்கின்றார்.
- பூசைகள், திருவிழாக்கள் செய்பவர்கள் வசதியற்ற தன்மையைக் கருதி, கொடுக்கும் பணத்தின் படியே செய்வார். வசதி கூடியவர்கள் கூடிய பணம் கொடுத்தால் இவ்வளவு போதும் என மீதிப் பணத்தைக் கொடுப்பார்.
- மற்ற ஆலயங்களுடன் ஒப்பிடும் போது இங்கு பூசை, திருவிழா செலவுத்தொகை மிகக் குறைவு. இதுவெல்லாம் அவரின் பணத்தாசையற்ற தன்மையைக் காட்டுகின்றன.
- காலநேரம் தவறாத பூசை ஒழுங்குகள்
- அன்றிலிருந்து உடல் சற்றுத் தளர்வடைந்த போதும் மாறாத சுறுசுறுப்பு
- எதையும் புன்சிரிப்போடு எதிர்கொள்ளும் மனோபாவம். தனி மனித தாக்குதல்கள், சூழ்ச்சிகள், புறங்கூறல்கள் என எதிர்கொள்ளும் போது மனமுடைந்தாலும் காட்டிக்கொள்ளாது புன்னகையுடன் அவற்றைக் கடந்து செல்வார்.
- மற்றக் கோயில்கள் போல் இங்கு வருமானம் குறைவு இரு பிள்ளைகள் வெளிநாடு. ஆனால் சித்திவிநாயகப் பெருமானின் தொண்டனாக 54 வருடங்களாகப் பொறுமை யுடன் பக்தியுடன் மேற்கொள்ளும் அவரின் சேவைகள் மகத்தானவை.
- மடப்பள்ளி வேலைகளில் மட்டும் கைதேர்ந்தவர்கள், பூசைகளில் சிறந்தவர்களென்று இருவகைப் பிராமணர்கள் உண்டு. ஆனால் இவர் இரண்டிலும் கைதேர்ந்தவர். அன்றிலிருந்து இன்று வரை பிரசாதங்களில் குறிப்பாக மோதகம், முறுக்கு என்பவற்றுக்கு எமது ஆலயமே பெயர் பெற்றது.
- திருவிழாக்களை அவர் மூத்த மருமகனான சிவஸ்ரீ வ.கேதீஸ்வரக்குருக்கள் தலைமையில் மிகவும் சிறப்புடன் நடத்துவார்.
- மூலஸ்தான விநாயகப் பெருமானைக் குழந்தை போல் பாவனை செய்து பக்குவமாக அபிஷேகம் செய்து சந்தனம் சாத்தி அலங்கரித்தால் காணக் கண் கோடி வேண்டும்.
- எழுந்தருளி விக்கிரகங்களை தங்க விக்கிரகங்கள் போல் மினுக்கி ஜொலிக்க வைத்திருப்பார், கண்கொள்ளாக் காட்சி.
- எழுக மூளாய் மறுமலர்ச்சி மையத்தின் நிகழ்வுகளில் ஆசியுரை வழங்குவதுடன் மட்டுமல்லாது எமது வட்சப் குழுமம், முகப்புத்தகம் என்பவையூடாக அனைத்து நிகழ்வுகளையும் உன்னிப்பாக அவதானிப்பவர்.
- மூளாய் வாழ்வியலுடன், வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தது ஐயாவின் வாழ்க்கை. மந்திர உச்சாடனத்திற்கு 108 உருத்திராக்க மணிகள், ஆனால் கழுத்தில் அணிவது 54 மணிகளுள்ள உருத்திராட்ச மாலை, அதுபோல 75 ஆவது வயதில் ஐயாவின் சேவைக்காலம் 54. எனவே இரண்டையும் ஒன்று சேரக் கொண்டாடுவது சாலப் பொருத்தமானது.
- மூளாய் சித்தி விநாயகப் பெருமானின் கருணையால் பிரம்மஸ்ரீ சி.ஜெயானந்த சர்மா அவர்கள் தனது குடும்பத்துடன் நீடூழி வாழப் பிரார்த்திக்கின்றோம். (4907)

ஓதல் முதல் அறுதொழிலின் உரிமை பூண்ட
உத்தம வைதிகர் வாழும் ஊரில் ஒன்றாம்
ஆதலினால் ஆத்திகர்கள் ஏத்தி நிற்கும்
அரியாலை பிறப்பூராய்க் கொண்ட சர்மன்
சீதரராம் ஜெயானந்த ஐயா எங்கள்
சிவம் மிளிர் - நன் மூளாய் வதிரன்புலோச்
சாதனை கொள் வைத்தீஸ்வரக் குருக்கள்
வரம் பெறு சீர் வனஜாம்பாள் கரம்பிடித்து
பேதமற இல்லறத்தை நடத்திப் பெற்று
மகடூஉக்கள் வதனா ஸ்ரீவித்யா கோமதியாம்
காதலொடு மலர்தூவித் தூபதீபம்
கருத்தினொடு நிதங் - காட்டி வழிபட்டேத்தி.
பூத பௌதிகங்களோடு புனிதர் மண்மேல்
பொங்கி மகிழ் கூட்டிப் பொலிந்துவாழ
பாதகரும் நேர்காணில் பணிந்து போற்ற
பக்குவமாய்ப் பேசி நலம் கேட்டு நல்ல
மோதகமும் சிலகொடுத்து மகிழ்ந்து வாழ்த்தும்
மேதகையே ஜெயானந்த குருவே வாழி!
பூதலமேல் பொன் புகழ் சீரோங்கு பிள்ளை
மருமக்கள் பேரரொடு வாழ்க! வாழ்க!
போதமிகு நற்குருவாய் பவளவிழாக் காணும்
"பொன்மனத்துப் புண்ணியரே வாழ்க! வாழ்க!
நோதலொடு நொம்பலைகள் தீர்ந்து மண்மேல்
நோன்மையொடு நீடு நிறைவாக வாழி!
நீதியினால் ஐம்பத்து நான்கு ஆண்டு எங்கள்
நிருமலற்குப் பூவிடு பாக்கியத்தீர் வாழி!
நாதியற்று வந்தவர்க்கு நற்றாய் ஆகி
நலஞ்செய்யும் ஜெயா ஐயா வாழி! வாழி!

**எழுக மூளாய் மறு மலர்ச்சி மையம்**
**பிரதான வீதி (782), மூளாய், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல்

வர்களின் உறவினர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றில் நேற்று முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கு நீதி வேண்டியும் சர்வதேச நீதி பொறிமுறையூடாக தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்களுக்கும் அனர்த்தங்களுக்கும் சர்வதேச சமூகம் ஒரு நீதியான பாதையை திறக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களும் இந்தச் செயற்பாடுகளை கையாளுகின்ற சிவில் செயற்பாட்டாளர்களும் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்கள்.

செம்மணியில் இன்றும் அகழ்ந்தெடுக்கப்படுகின்ற மனித எலும்புக்கூடுகள் 100ஐ தாண்டி இருக்கின்றன. அதேபோன்று சம்பூர், மன்னார், திருக்கேதீஸ்வரம் கொக்குத்தொடுவாய் எனப் பல்வேறு இடங்களில் மனித புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அந்தப் புதைகுழிகளில் அநேகமானது தமிழர்களுடையதாகவே உள்ளன. இவற்றில் மீட்கப்பட்ட என்புத் தொகுதிகள் இளைஞர்கள், குழந்தைகளுடையது என்பது பெரும்பாலும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அண்மையிலே கொக்குத்தொடுவாயிலே 51 மனித எலும்புக்கூடுகள் துப்பாக்கியால் சுட்டும் அடித்து முறிக்கப்பட்டும் புதைக்கப்பட்டிருக்கின்றன என மருத்துவ ஆய்வுகளில் கண்டறியப்பட்டிருக்கின்றது.

அதேபோல செம்மணியில் எடுக்கப்பட்டு இருக்கின்ற என்புக்கூடுகள் தொகுதி தொகுதிகளாக சிறு குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள், சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரைக்கும் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

இவையெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பொழுதும் எந்தச் சிந்தனையும் இல்லாமல் இருக்கின்ற அரசு இதை ஒரு இனப்படுகொலை என்று வெளியில் சொல்ல மறுப்பதும் தமிழர்களைப் பொறுத்தவரை ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது.

பாதிக்கப்பட்ட சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சர்வதேச நீதியாக தமிழ் மக்கள் சர்வதேச மனித உரிமை அமைப்புகளை வேண்டியுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7,316)

## 11 மனித

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் 2ஆம் கட்டத்தின் 21ஆவது நாள் அகழ்வு நேற்றுச் சனிக்கிழமை யாழ்பாண நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் மேலும் 11 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன.

மேலும் இதுவரை 90 எலும்புக்கூடுகள் முழுமையாக தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் 46 பிற ஆதாரப் பொருட்களும் உள்ளன.

நேற்று அடையாளம் காணப்பட்ட 11 எலும்புக்கூடுகளுடன் மொத்தமாக 101 எலும்புக்கூடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

மேலும் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளின் ஸ்கான் பரிசோதனைக்கு பாதுகாப்பு அமைச்சு இதுவரை அனுமதி வழங்கவில்லை என்று சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (ம-7,33)

## கிண்ணம் வென்றது நியூசிலாந்து

### தென்னாபிரிக்கா அதிர்ச்சி




முத்தரப்பு "ரி-20" இறுதிப் போட்டியில் அசத்திய நியூசிலாந்து அணி, 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி கிண்ணம் வென்றது.

சிம்பாப்வேயில், முத்தரப்பு "ரி20" தொடர் நடந்தது. ஹராரேயில் நடந்த இறுதிப் போட்டியில் நியூசிலாந்து, தென்னாபிரிக்கா அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் வான் டெர் துசென், பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

நியூசிலாந்து அணிக்கு ரிம் செய்பெர்ட் (30), கொன்வே (47), ரச்சின் ரவிந்திரா (47) கைகொடுத்தனர். நியூசிலாந்து அணி 20 ஓவரில், 5 விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்களை எடுத்தது.

சவாலான இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு லுவான் பிரிட்டோரியஸ் (51) அரைச்சதம் விளாசினார். ரீசா ஹென்ட்ரிக்ஸ்(37), அணித் தலைவர் துசென் (18) ஆறுதல் கொடுத்தனர். கடைசி ஓவரில் வெற்றிக்கு 7 ஓட்டங்கள் தேவைப்பட்டன. மட் ஹென்றி பந்துவீசினார். முதல் பந்தை வீணடித்த பிரவிஸ் (31), 2ஆவது பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்த இரண்டு பந்துகளில், 3 ஓட்டங்கள் கிடைத்தது. ஐந்தாவது பந்தில் ஜார்ஜ் லிண்டே (10) ஆட்டமிழக்க, ஒரு பந்தில் 4 ஓட்டங்கள் தேவைப்பட்டது. இதனை செனுரன் முத்துசாமி வீணடித்தார்.

இறுதியில் தென்னாபிரிக்க அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்கள் மட்டும் எடுத்து 3 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ம-7)

# மரண அறிவித்தல்



பிறப்பு : 21.10.1965 இறப்பு : 26.07.2025

## திருமதி கணேசலட்சுமி உமாசுதன் (கணா மிஸ்)

(ஓய்வுபெற்ற வரலாற்றுப் பாட ஆசிரியை)
தி/சென் மேரிஸ் வித்தியாலயம், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

""நவமஹால்" கல்வளை, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசலட்சுமி உமாசுதன் அவர்கள் நேற்று (26.07.2025) சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பாபிள்ளை (இளைப்பாறிய உப-அதிபர் யா/ விக்ரோரியாக் கல்லூரி-சுழிபுரம்), நவமணி (இளைப்பாறிய ஆசிரியை - யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி) தம்பதியரின் பாசமிகு மூத்த புதல்வியும் திரு.சண்முகராசா உமாசுதன் (திருமகள் அழுத்தகம்) அவர்களின் பாசமிகு துணைவியும் மாதுமை (உமா-கனடா) அவர்களின் அன்புச் சகோதரியும் அமரர் சண்முகராசா-பொன்மணி, ஆன்மீக அன்னை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, செல்வி கனகம்மா அப்பாக்குட்டி, அமரர் பொற்கொடி, ஆகியோரின் பாசமிகு மருமகளும் உமையாள், உமைபாரதி, உமைபைரவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவகரனின் மாமியும் ஆதித்தன் (கனடா), இராஜேஸ்வரி-மைக்கல், மகேஸ்வரி - சர்வானந்தன், பாலசுந்தரம்-சறோஜினி, இராஜரட்ணம்-சாந்தி, பாமதி-அமரர் ஞானேஸ்வரன், ரேவதி, அமரர் செந்தூரன்-சுகன்யா ஆகியோரின் மைத்துனியும் அபிரா, சாயிரா, சினேகன், சரண்யா, சாய்ராம் ஆகியோரின் பெரியம்மாவும் பிருந்தா-அனோயன், கபிலன்-சோபிதா, ரஜீவ் - தினுஷியா, கல்ப்பனா, இராஜ்லோஜன் ஆகியோரின் மாமியும் அமரர் சேனாதிராசா, அமரர் சண்முகம் ஆகியோரின் பெறாமகளும் சொர்ணராணி, பத்மதேவி, பத்மஜோதி, பத்மரஜனி, லோகேஸ்வரி, கணேஸ், சசிதரன், சிறிநாகேஸ்வரா, ஈஸ்வரன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 28.07.2025 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"நவமஹால்"
கல்வளை, சண்டிலிப்பாய். (4914)

தகவல் - குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருட்களின் ஊடுருவலை விரைந்து கட்டுப்படுத்துங்கள்!

## ரவிகரன் எம்.பி வலியுறுத்து

(முல்லைத்தீவு)

**கடந்த 2009ஆம் ஆண்டிற்குமுன்னர் வன்னிப் பகுதியில் கொடிய உயிர்கொல்லி போதைப்பொருட்களின் ஊடுருவல்கள் இருக்கவில்லை. தற்போது வன்னிப் பகுதியில் அதிகரித்துள்ள போதைப்பொருள் ஊடுருவல்களைக் கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவிடம் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.**



பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் ஆலோசனைக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. குறித்த கூட்டத்திலேயே குறித்த விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், கசிப்பு, கஞ்சா, ஹெரோயின், ஐஸ் போதைப்பொருள், போதை மாத்திரை உள்ளிட்ட பல உயிர் கொல்லி போதைப்பொருட்கள் வன்னியில் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது.

அதிகளவானர்கள் உயிரிழந்து வருகின்றனர். பலர் உயிரிழக்கும் நிலையில் காணப்படுகின்றனர். இது தவிர இத்தகைய போதைப் பொருள் பாவனைகளால் பல்வேறு வன்முறைச்சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. சமூகச் சீர்கேடான விடயங்களும் அதிகரித்துச்செல்கின்றது. எனவே இந்த உயிர் கொல்லிப் போதைப்பொருட்க-ளின் ஊடுருவர்களை கட்டுப்படுத்தும் விவகாரத்தில் கடந்த கால அரசுகள் செயற்பட்டதைப் போன்றில்லாமல். இந்த அரசு இவ்வாறான போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கரிசனையோடு செயற்பட வேண்டும். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் தாங்கள் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டுமமெனத் தெரிவித்தார்.

இந்நிலையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால இதற்குப் பதிலளிக்கையில், பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்ததைப் போன்று இத்தகைய உயிர் கொல்லி போதைப்பொருள் ஊடுருவல் பிரச்சினை நாட்டின் பலபாகங்களிலும் காணப்படுகின்றன.

அவ்வாறான கொடிய போதைப் பொருள் ஊடுருவல்களை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்கு விரைவில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்தார். (நி-299)

# அநுராதபுரம்-குருநாகல் வீதியில் விபத்து

## மாணவர்கள் உட்பட ஐவர் காயம்



(கொழும்பு)

அநுராதபுரம் - குருணாகல் பிரதான வீதியில் 2ஆவது மைல்கல் பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இரு பாடசாலை மாணவர்கள் ஐந்து பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்து மற்றும் கெப் வாகனம், ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது கெப் வாகனத்தின் சாரதியும் பேருந்தில் பயணித்த நால்வரும் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் பாடசாலை மாணவர்கள் இருவரும் ஆசிரியை ஒருவரும் காயப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# 50 அடி பள்ளத்தில் பாய்ந்த கார்

## பசறையில் சம்பவம்

(பதுளை)

பசறையில் சுமார் 50 அடி பள்ளத்தில் காரொன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

பசறை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக கடந்த வியாழக்கிழமை கார் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காரில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வரும் சிறு காயங்களுடன் மீட்கப்பட்டு பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (நி)

# இராசிபலன்

27.07.2025
ஆடி 11, ஞாயிற்றுக்கிழமை
திருதியை பின்னிரவு 12.39 மணிவரை

மகம் முன்னிரவு 6.51 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை

சந்திராஷ்டமம்-உத்தராடம், திருவோணம்

**வளவன்**


மேஷம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடு திருப்தி தரும், சந்தித்தவர்களால் சந்தோசம் குடிகொள்ளும், பிள்ளைகள் குடும்ப பொறுப்புடன் நடந்து கொள்வர்.


கடகம்

குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருள் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.


துலாம்

எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


மகரம்

சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாது தாமதமாகலாம், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, விருந்தினர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், உற்சாகமான நாள்.


சிம்மம்

விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், குடும்பச் சுமை கூடும், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.


விருச்சிகம்

வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொழில் வளர்ச்சி கூடும், கௌரவமான நாள்.


கும்பம்

மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.


மிதுனம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும்.


கன்னி

தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு.


தனுசு

குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


மீனம்

உடல் நலனில் இருந்த பாதிப்புகள் விலகும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தைரியம் எண்ணற்ற எதிரியை வென்று விடும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலையாளிகளிடம் நீதி வழங்கும் பொறுப்பை ஒப்படைக்க வேண்டாம்!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஐ.நாவுக்கு கடிதம்

(சாவகச்சேரி)

கொலையாளிகளிடமே நீதி வழங்கும் பொறுப்பை ஒப்படைக்க பரிந்துரை செய்ய வேண்டாம் என தெரிவித்து, வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கை தமிழர்கள் 1948 இலிருந்து பல்வேறு வழிகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். இவற்றில் எண்ணிக்கையில் அதிக அளவிலும் வெளிப்படையாகவே தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பை உறுதிப்படுத்துவதாகவும் பின்வரும் சம்பவம் நடந்தேறியது.

2009 இல் இறுதியுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து எம்மால் ஒப்படைக்கப்பட்ட உறவுகளையும், தாமாகவே தனியாகவும், கைக்குழந்தைகளுடனும், மனைவியுடனும் குடும்பம் குடும்பமாகச் சரணடைந்த எமது உறவுகளையும் வலிந்து காணாமல் போகச் செய்தமையே அது.

சரணடைய முன் அரசினால் கொடுக்கப்பட்ட பொய்யான வாக்குறுதியை நம்பிய மக்கள் திட்டமிட்டு ஏமாற்றப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

இப்படி இலங்கை அரச படைகளாலும், அதன் துணை இராணுவக்குழுக்களாலும் வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்ட எம் உறவுகளைத் தேடி அலைந்து, போராடி, காணாமல் ஆக்கப்பட்டோருக்காக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களால் உருவாக்கப்பட்ட பல விசாரணை ஆணைக்குழுக்களினாலும் எந்த பயனும் இல்லை என்பதனை உணர்ந்த நிலையில், இலங்கையின் வடக்கு- கிழக்கில் வாழும் நாம் எமது உறவுகளின் நிலையை அறியும் நோக்குடன் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம்.

நாங்கள் ஏன் காணாமல் போனோர் அலுவலகத்தை நிராகரித்து சர்வதேசப் பொறிமுறையை மட்டும் கேட்கின்றோம் என்பதற்கான காரணங்களைப் பட்டியலிட்டு கையளித்திருந்தோம். ஆனால் அவை எவற்றையும் கருத்தில் எடுக்காது உள்ளூர் பொறிமுறையான காணாமல் போனோர் அலுவலகத்தை பாராட்டியுள்ளீர்கள்.

ஐ.நாவின் 30/1 பரிந்துரையின் படி காணாமல் போனோர் அலுவலகத்தை அமைப்பதற்காக நடத்தப்பட்ட மக்கள் கருத்துக் கணிப்பின் பரிந் துரையை கருத்திற்கொள்ளாது அமைக்கப்பட்ட காணாமல் போனோர் அலுவலகம் என்று தெரிந்தும் அதை சிபார்சு செய்வதும், பாராட்டுவதும் ஐ.நா வின் மனித உரிமை பேரவை மீது எமக்குள்ள நம்பிக்கையை இழக்கச் செய்யும் செயலாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

தாங்கள் நேரில் பார்த்த சிந்துப்பாத்தி மயான மனிதப்புதைகுழியும் அதேபோல் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகளும் தமிழர்கள் எப்படி சிங்கள படைகளால் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை விளங்கிக் கொள்வதற்கு போதும்.

பொம்மை வைத்து விளையாடிய பாலகியும், புத்தகப்பையுடன் சென்ற சிறுமியும் எப்படி நிர்வாணமாக்கப்பட்டு சித்திர வதை செய்து கொலை செய்யப்பட்டனர் என்பதை நேரில் தெரிந்து கொண்ட நீங்கள் பரிந்துரை செய்ய வேண்டாம்.

மேலும், எமது ரகசியத் தன்மையும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும் என்ற நம்பிக்கையிலேயே இன்னும் நீடித்துவரும் இலங்கைப் பாதுகாப்பு படையின் அச்சுறுத்தலையும் மீறி எமது சாட்சிகளை ஐ.நாவிடம் நாங்கள் பதிவு செய்துள்ளோம்.

கடந்த இலங்கை பயணத்துக்கான உங்களது இறுதி உரையில் நீங்கள் உள்நாட்டு பொறிமுறையுடன் இணைந்து இயங்க வேண்டும் எனக் குறிப்பிட்ட விடயம், உங்களிடம் நம்பிக்கையின் அடிப்படையில் சாட்சியமளித்தவர்கள் மத்தியில் பாதுகாப்பு தொடர்பிலான பயத்தினையும், ஐ.நா அலுவலகத்தினால் ஏமாற்றப்பட்ட உணர்வினையும் ஏற்படுத்தி உள்ளது.

அனுமதி அளிக்கப்படாத எந்த சந்தர்ப்பத்திலும் நம்பிக்கையுடன் உங்கள் அலுவலகத்துடன் நாம் பகிர்ந்த சாட்சியங்கள் இலங்கை உள்நாட்டு பொறிமுறை சார்ந்த எந்த அதிகாரிகளுடனும் பகிரப்படமாட்டாது என்பதை உறுதிப்படுத்துமாறும், 16 வருடங்களாகியும் நீதிக்கான எந்த பங்களிப்பினையும் அளிக்க தவறிய காணாமல் போனோருக்கான அலுவலகத்தை மீண்டும் எம்மீது திணித்து எமக்கு நீதி கிடைப்பதற்கான காலத்தை இன்னும் இழுத்தடிக்க வழி வகுக்க வேண்டாம் என்றும் உங்களை தாழ்மையுடன் வேண்டுகிறோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-30)



வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் கறுப்பு யூலை நினைவேந்தல் நிகழ்வுகள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

பிரதேச சபை முன்றலில் கறுப்பு யூலை இன அழிப்பில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட அரசியல் கைதிகளையும் நினைந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொதுஈகைச் சுடரினை தவிசாளர் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து உறுப்பினர்கள் அஞ்சலிச் சுடர் விளக்குகளை ஏற்றி வைத்து அஞ்சலித்தனர்.

(படம்:-சிவசாந்தன்)

# நல்லூர் பிரதேச சபை தவிசாளர் மாநகர முதல்வர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்மாநகரசபை முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசாவிற்கும் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.மயூரன் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான சிநேக பூர்வ சந்திப்பு ஒன்று அண்மையில் மாநகர முதல்வர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட முதல்வர் மற்றும் தவிசாளர் ஆகியோர் தமக்கிடையே வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டதுடன், தத்தமது சபைகளின் செயற்பாடுகள் தொடர்பில் குறிப்பாக திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

மேற்படி சந்திப்பில் மாநகர பிரதி முதல்வர் இ.தயாளன், நல்லூர் பிரதேச சபை பிரதி தவி சாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 250 | 180 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 400 | 300 | 350 |
| தக்காளி | 200 | 200 | 250 | 130 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 300 | 250 |
| கோவா | 300 | 400 | 400 | 250 | 350 |
| கரட் | 300 | 400 | 450 | 350 | 400 |
| பூசணி | 100 | 140 | 120 | 100 | 100 |
| புடோல் | 100 | 100 | 150 | 100 | 120 |
| வாழைக்காய் | 150 | 120 | 120 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 400 | 300 | 350 | 350 | 320 |
| பெரிய வெங்காயம் | 140 | 180 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 600 | 400 | 450 | 500 | 400 |
| வெண்டக்காய் | 150 | 120 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 250 | 280 | 400 |
| பயற்றங்காய் | 400 | 500 | 300 | 300 | 300 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 250 | 300 |
| பீற்றூட் | 150 | 200 | 250 | 140 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 500 | 350 | 600 |
| போஞ்சி | 600 | 550 | 500 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 250 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 120-160 | 150 | 100 | 150 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 160 | 150 | 80-140 | 140-180 |
| இராசவள்ளி | 800 | 700 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 500 | 250 | 400 |
| முள்ளங்கி | 150 | 120 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 80 | 200 |

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் பெருந்தொகையான கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

புலனாய்வு துறையினருக்கும் கடற்படையினருக்கும் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இச் சுற்றிவளைப்பில் 34 பொதிகள் அடங்கிய 75 கிலோ கேரளா கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை ஏனைய சந்தேக நபர்கள் தப்பி சென்றுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8)



# ஆடிப்பூரம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை-தெக்கணம்பாய் அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய ஆடிப்பூர மஹா சங்காபிஷேகம் நாளை திங்கட்கிழமை சதுர்த்தித் திதியும் பூர நட்சத்திரமும் கூடிய சுபவேளையில் இடம்பெறவுள்ளது. கண்ணகி அம்மனுக்கு காலை 9.30 மணியளவில் நவோத்தர சகஸ்ர (1009) சங்காபிஷேகம் நடைபெற்று முற்பகல் 11 மணிக்கு அம்பாளுக்கு ஆடிப்பூர பூர்வகர்ம ருதுசாந்தி வைபவமும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் இரவு 7 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையைத் தொடர்ந்து அம்பாளின் திருவீதியுலாவும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 503
27.07.2025




# தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்





அமெரிக்காவில் அடிமைச் சந்தைகளில் விற்கப்பட்ட கறுப்பினர்த்தவர்கள் இன்று அந்நாட்டை ஆளும் ஆளுமையைப் பெற்றிருக்கிறார்கள் எனின், அமெரிக்க மக்களின் மனமாற்றமே அதற்குக் காரணம்.

ஆனால் இலங்கையிலோ தனது சொந்த நாட்டில் அகதியாய் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழினத்தின் நிலை துயரத்திற்குரியது.

காலனித்துவ ஆட்சியில் தனது சுயநிர்ணய உரிமைகளுடன் வாழ்ந்த தமிழினத்திற்கு இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னான காலப்பகுதி மிகக் கொடுமையானது என்பதில் மாற்றுக் கருத்தேதும் இல்லை.

> “தமிழினம் இந்த நாட்டின் பூர்வீகக் குடி. ஆயினும் அந்த உண்மையை இலங்கை ஆட்சியாளர்கள் எவரும் ஏற்பதாய் இல்லை. மாறாக தமிழினத்தை தொடர்ந்து வஞ்சிக்கும் செயல்களிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.”

இதற்கு முழுப்பொறுப்பையும் காலம் காலமாக வந்த எமது தமிழ்த் தலைமைகளே ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்விடத்தில் இதைக் கூறும் போது பலருக்கு கோபம் எழலாம், ஆயினும் இதுவே நிறுதிட்டமான உண்மை.

தொடர்ந்து வந்த தமிழ்த்தலைவர்கள் எவரும் தமிழினத்தின் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்கவில்லை. அவ்வாறு சிந்தித்திருந்தால் அன்றே வெள்ளையரிடம் எமக்கான உரிமைகளைக் கேட்டு வாங்கியிருப்பார்கள்.

என்ன சொல்வது இன்றுபோல் என்றும் நிலை இருக்கும் என்ற அவர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை தமிழினத்தின் சுதந்திரைத்தை அதள பாதாளத்துக்குள் வீழ்த்திவிட்டது.

தமிழினத்தின் உரிமைகள் கொஞ்சம் கொஞ்சமாய் பறிக்கப்பட்டதும், தமிழினத்தின் வளங்கள் பேரினவாதிகளால் சூறையாடப்பட்டதும், தமிழினத்தின் பூர்வீக நிலங்கள் பறிக்கப்பட்டதும், தமிழினத்திற்கான நீதி மறுக்கப்பட்டதுமான செயல்கள் நடக்கத் தொடங்கியதும் இலங்கையில் இனப்போர் தோன்றியது.

இந்த உண்மையை புரிந்து கொள்ளாமல் தமக்கான நீதியைக் கேட்ட தமிழினத்தை பயங்கரவாதிகள் என்று கூறுவது ஒருநாளும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

இலங்கை அரசுகளால் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என பிரகடனப்படுத்தப்பட்ட போரில் அப்பாவிப் பொதுமக்கள் இலக்கு வைக்கப்பட்டதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆயினும் ஆட்சியாளர்கள் மடிந்த பொதுமக்களை பயங்கரவாதிகள் என்று கூறுவது வேடிக்கைக்குரியது.

இந்நிலையிலேயே வன்னிப் பெருநிலப்பரப்பில் விடுதலைப் புலிகளுக்கெதிரான போர் உச்சம் பெறத் தொடங்கியது.

மனித இன வரலாற்றில் நடந்திராத அத்தனை கொடூரங்களும் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்து முடிந்ததாயினும் தமிழினத்துக்கான நீதி தொடர்ந்து மறுக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த உச்சப்போரில் தமிழினம் திட்டமிட்டு அழிக்கப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள்பல சர்வதேசத்தின் கைகளில் இருந்தும் தமிழினத்துக்கான நீதி மறுக்கப்படுவதற்குள் இருக்கும் சர்வதேச அரசியல் கொடூரத்தை எவ்வாறு விபரிக்க முடியும்.

இப்போது செம்மணி மனிதப் புதைகுழி அடையாளப்படுத்தப்பட்டு அகழ்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தோண்டத் தோண்ட மனித எலும்புக்கூடுகள் வந்து கொண்டே இருக்கின்றன.

இற்றைவரை 90 எலும்புக்கூடுகளுக்கு மேல் அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் தொடர்ந்து அகழ்வுப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

செம்மணிப் புதைகுழி விவகாரம் மீண்டும் தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை உலகிற்கு எடுத்தியம்பி இருக்கின்றது.

இதன் விளைவே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் செம்மணி மனிதப் புதைகுழித்திடலுக்கு வந்து அங்கு உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியிருப்பதான செயல்.

செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பில் நேற்று வடக்கு, கிழக்கு தழுவிய பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றிருந்தது.

தமிழின அழிப்புக்கு நீதிகோரிய மேற்குறித்த ஆர்ப்பாட்டம் நிச்சயம் சர்வதேச அளவில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும்.

ஏனெனில் மேற்குறித்த ஆர்ப்பாட்டம் கொழும்பிலுள்ள மனித உரிமை அலுவலகத்திற்கு எதிரேயும் நடைபெற்றிருக்கிறது.

இங்குதான் நாம் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும்.

அதாவது தற்போதைய தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி இலங்கை வரலாற்றில் என்றுமில்லாத சாதனையைப் படைத்த ஆட்சி. தமிழினத்தை எவ்வாறு அழித்தொழித்தனரோ அதேபோல ஜே.வி.பி ஆதரவாளர்களை அரச இயந்திரங்கள் தேடித் தேடி அழித்தன.

ஜே.வி.பி அமைப்பு சர்வசாதாரணமான ஒரு அமைப்பல்ல, அது இலங்கை வரலாற்றை மாற்றி எழுதும், இளைஞர் பட்டாளத்தை தன்னகத்தே கொண்ட அமைப்பாகத் திகழ்ந்திருந்ததாயினும் இலங்கை ஆட்சியாளர்களாலேயே அவர்கள் கொடூரமாக அழிக்கப்பட்டிருந்தனர்.

அந்த வழியில் வந்த அநுர அரசிற்கு தமிழினம் பட்ட வலியை உணர்ந்துகொள்வது சுலபமானது.

எனவே இந்தப் பொன்னான வாய்ப்பைப் பயன்படுத்த நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கான நீதியை இந்த அரசு இருக்கும் போதே பெற்றுக்கொள்ள முனைப்புக் காட்ட வேண்டும்.

இந்த வாய்ப்பைத் தவறவிட்டால் இனியொரு வாய்ப்பு எமக்குக் கிடைக்காது என்பது நிறுதிட்டமான உண்மை

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## கீரிமலைக் கடலில் இறங்கினால் கல் தடக்கும், கால் வலிக்கும்...



**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் பண்டிதர் பரமலிங்கத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

என்ன இன்னும் பண்டிதர் ஐயாவை காணவில்லை. என்ன சங்கதி? கங்காணி கார்த்திகேயன் விசாரிக்க, அந்நேரம் பார்த்து பண்டிதர் பரமலிங்கம் காலை நொண்டியபடி ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

**மூப்பர்:** பண்டிதர் ஐயா என்ன நடந்தது.

**பண்டிதர்:** அதையேன் கேக்கிறியள். ஆடி அமாவாசை விரதத்திற்காக கீரிமலைக்குப் போய் கடலில நீராடுவம் எண்டு இறங்கினன்.

கால் வைக்க முடியவில்லை. அவ்வளவுக்கு கடல் முழுக்க கல்லு. அந்தக் கல்லுக்குள்ள விழுந்து எழும்பினதில கல்லு காலை வெட்டிப் போட்டுது.

**விதானையார்:** இலங்கையில சைவ சமயத்தின்ர நிலைமை எப்படி இருக்கிறதென்பதற்கு கீரிமலைக் கடல் நல்ல சான்று.

**சிறாப்பர்:** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:** கடந்த ஆடி அமாவாசை விரதத்தின் போது, கீரிமலைக் கடலில சுமார் 75 ஆயிரம் பேர் நீராடிப் பிதிர்க்கடன் செய்திருப்பினம்.

இதைவிட, கீரிமலை புனிததீர்த்தக் கரையில தான் அந்தியேட்டிக் கிரியைகள் நடக்கின்றன. ஆனால் கீரிமலைக் கடலில இருக்கின்ற கல்லுகளை அகற்றி அதனை நல்ல முறையில பேணுவதற்கு முடியல்ல.

ஆனால் இதே கீரிமலைக்கடலில பௌத்தர்கள் நீராடுவதாக இருந்தால், படையினர் முழுப்பேரும் நின்று கல்லை அகற்றியிருப்பினம்.

அதே நேரம் கத்தோலிக்க மக்கள் நீராடுகின்ற இடமாக இருந்தால், அரச அதிகாரிகள் தாங்களே நேரில நிண்டு முழுக்கல்லையும் தூக்கிப் போட்டிருப்பினம்.

ஏன்? கீரிமலை புனித தீர்த்தக் கரையானது இஸ்லாமியர்களின் புனித இடம் என்றால், சவுதியில இருந்து ஜே. சி. பி வந்து இருக்கிற கல்லுகளையெல்லாம் பிரட்டி எடுத்திருக்கும். கூடவே பாலைவனத்து மணலும் கடலுக்குள்ள போடப்பட்டிருக்கும்.

ஆனால் கீரிமலை புனித கடல் தீர்த்தத்தில சைவ மக்களல்லோ பிதிர்க்கடன் செய்து நீராடுகினம். ஆகையால அங்க கல்லுகள் அகற்றப்பட மாட்டாது.

சைவ சமயத்தவர்கள் கீரிமலைக்கடலில விழுந்து எழும்பினால் என்ன, கவுண்டால் என்ன என்பது தான் சைவ சமயத்தின்ர நிலைமை.

இவ்வாறு விதானையார் கூற, ஆலடி நிசப்த மாகியது. நிசப்தத்தைக் குலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:** அது சரி கீரிமலைக்கடலில பிதிர்க்கடன் செய்யிறவர்களிட்ட நிதி சேகரித்தால் கூட, அந்த கடலில இருக்கின்ற கல்லுகளை அள்ளி விட முடியும்.

**வாத்தியார்:** சாத்திரியார், கீரிமலையில பிதிர்க்கடன் மற்றும் அந்தியேட்டிக் கிரியைகள் செய்யிறத்துக்காக எங்கட சனங்கள் நிறையக் காசைக் கொடுக்கினம்.

ஆனால் அந்த நிதி தனிப்பட்டவர்களுக்குப் போய்ச்சேருதேயல்லாது, பொது வேலைக்குப் பயன்படவில்லை.

அந்தியேட்டிக் கிரியைகள் செய்யிற மண்டபத்தில பாருங்க, ஒன்பது தேங்காய் ஒன்பது கும்பம் ஒரு மாதத்திற்கு அதையே வைத்து எல்லா ஆத்மாக்களுக்கும் அந்தியேட்டி நடக்கும்.

இதை விட, அந்தியேட்டிக்குத் தேவையான அபிசேகப் பொருட்கள் நவதானியங்கள் எல் லாம் ஒண்டு தான்.

ஒருக்கா அங்க போய் நிண்டு பார்த்தால் தெரியும். அந்தியேட்டி எண்ட பெயரில நடக்கிற வியாபாரத்தை.

இதைவிட, அங்க உதவிக்கு நிற்கிறவர்களுக்கு கொடுக்க வேண்டிய கையூட்டுகள் சொல்லிமாளாது.

எங்கட இறைவரித் திணைக்களம் ஒருக்கா அங்க போய் பார்த்தால் தெரியும், ஐ. எம். எப் தந்த கடனில அரைவாசியை கீரிமலை அந்தியேட்டி மடத்தால கட்ட முடியும் எண்டு.

இப்படி வருமானம் வந்தாலும் கடலில கிடக்கின்ற கல்லு, சட்டி, முட்டி எல்லாம் அப்படியே கிடந்து புனித தீர்த்தத்தை அழுக்காக்குது.

**பண்டிதர்:** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. அதே நேரம் வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில ஆடி அமாவாசை தினத்தில நடந்த அந்த நிகழ்வைப் பார்த்ததில இருந்து இரவு முழுக்க எனக்கு நித்திரை இல்லை.

**கங்காணி:** பண்டிதர் ஐயா! அப்படி என்ன நடந்தது.

**பண்டிதர்:** கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் இப்ப தமிழ் நாட்டில உள்ள கோயில்கள் மாதிரியல்லோ வந்திட்டுது.

மோட்ச அர்ச்சனை செய்வதற்கு 250 ரூபாய் டிக்கற் எடுத்தவர்கள் மாத்திரம் மூலஸ்தானத்திற்கு முன்பான மண்டபம் வரை சென்று, அர்ச்சனை செய்யலாம். ஏனையவர்கள் கொடித்தம்பத்திற்கு முன்னால நிற்க வேண்டியது தான்.

அதிலும் கொடித்தம்பத்திற்கு முன்னால நிற்பவர்கள் மூலஸ்தானத்தில இருக்கின்ற சிவலிங்கப் பெருமானைப் பார்க்கவும் தரிசிக்கவும் முடியாது.

ஏலவே 250 ரூபாய் கொடுத்தவர்கள் முன்னுக்கு போய் மூலஸ்தானத்தை மறைத்துப் போடுவினம்.

**சிறாப்பர்:** ஏன் பண்டிதர். 250 ரூபாய் டிக்கற் எடுக்காதவர்களும் மூலஸ்தானத்தின் முன் மண்டபத்துக்குப் போனால் என்ன?

**பண்டிதர்:** என்னெண்டு போக முடியும். 250 ரூபா டிக்கற்றை அங்க நிற்கிற ஐயா ஒருவர் வாங்கிக்கொண்டு தான் அர்ச்சனை செய்கிறவர்களை மூலஸ்தான முன் மண்டபத்திற்குப் போக அனுமதிக்கிறார்.

250 ரூபா டிக்கற் எடுக்காதவர்கள் கொடித்தம்பத்தோட நிற்க வேண்டியது தான்.

இவ்வாறு பண்டிதர் கூறியதும் ஆலடி அப்படியே அதிர்ந்து போனது.

**விதானையார்:** என்ன இருந்தாலும் இப்படியொரு முறையை கீரிமலை நகுலேஸ்வர ஆலயம் செய்திருக்கக் கூடாது.

தமிழ் நாட்டில இப்படியான ஒரு முறையால எவ்வளவோ விமர்சனங்கள் ஏற்பட்டிருக்குது.

ஆனால் எங்கட யாழ்ப்பாண மண்ணில அந்த முறையில்லை.

மூலஸ்தானத்தின் முன் மண்டபம் வரை அடியார்கள் செல்வதை நாங்கள் முழுமையாக வரவேற்கின்றோம்.

இறைவனை நெருக்கமாக நின்று வழிபட வேண்டும். அது பக்திவயப்படுவதற்கு அவசியம்.

ஆனால், காசு கொடுத்து டிக்கற் எடுத்தால் தான் அந்த இடத்தில நின்று கடவுளைத் தரிசிக்கலாம் எண்டால், அதனை ஒரு போதும் ஏற்க முடியாது.

ஆகையால எல்லோராலும் மதிக்கப்படுகின்ற கீரிமலை நகுலேஸ்வரக் குருக்களின்ர ஆலயத்தில மூலஸ்தான முன் மண்டபம் வரை சென்று அடியவர்கள் நகுலேஸ்வரப் பெருமானை வழிபடுகின்ற புரட்சியைச் செய்ய வேணும்.


அதை சொர்ண புஸ்பம் இல்லாமல் செய்தால் தான் அது கண்டு; வானுலகிருக்கும் நகுலேஸ்வரக் குருக்கள் மற்றும் குமாரசுவாமிக் குருக்கள் ஆகியோர் மகிழ்வர்.

இவ்வாறு விதானையார் கூற, அதைத் தானும் ஏற்றுக் கொள்வது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாசர் பதில்கள்



இத்தனை அழிவுகளையும் சந்தித்த இனத்திற்கு இறுதியில் விடுதலையும் இல்லை. இனப்படு கொலைக்கான நீதியே இல்லாது போய் விட்டதே?

**விவசாயம் செய்வது கௌரவக் குறைச்சலா வியாசரே?**

செல்வசோதி-மந்துவில்

என்ன தான் உலகின் உச்சமான தொழில் அலுவலகத்தில் வேலை செய்தாலும் மதியமானால் பசிக்குமல்லவா? அப்போது உணவைத் தட்டில் போட்டு சாப்பிட வேண்டுமல்லவா?

இந்தச் சாப்பாட்டை உற்பத்தி செய்ய ஒரு விவசாயி எத்துணை கஷ்டங்களை அனுபவத்திருப்பான் என்பதைப் புரிந்த ஒவ்வொரு மனிதனும் விவசாயத்தை தரக்குறைவாக நினைக்க மாட்டான்.

என்னைப் பொறுத்தவரை உலகில் மிக உயர்வான தொழில் எதுவென்றால் அது விவசாயம் என்பேன்.

விவசாயியே உயர்வான தொழி லாளி என்பேன். விவசாயத்திற்கும் விவசாயிக்கும் கீழே தான் மற்ற அனைவரும்.

**எப்படிப் படுத்தாலும் தூங்க முடிய வில்லை வியாசரே. தூக்கம் வருகிறதே இல்லை. என்ன செய்யலாம்?**

ரிதுஸ்-வடமராட்சி

எங்களில் இருக்கும் பெரும் பிரச்சினையே தூங்கும் போது தலைமாட்டில் தொலைபேசியை வைத்து தூங்குவது தான்.

தூக்கம் வராததால் தொலைபேசியை நோண்டுகிறோமா? தொலைபேசியை நோண்டுவதால் தூக்கம் வரவில்லையா என்பது புரியவே இல்லை.

தூங்குவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னரே தொலைபேசியை அணைத்து வைத்து விட்டு தூங்குங்களேன்.

தூக்கம் உங்கள் கண்ணைத் தழுவும்.

**வேண்டாப் பொண்டாட்டி கைபட்டால் குற்றம் கால்பட்டால் குற்றம் என்பது?**

சந்திரா-வதிரி

காலை ஏழு மணி ஆன பின்பும் அயர்ந்து தூங்குகிறார்கள் என்றால் தட்டித் தான் எழுப்ப வேண்டும் என்ற சட்டம் ஏதும் இல்லை.

சட்டி பானையைத் தட்டி விடுவது, ரேடியோவின் சத்தத்தை அதிகரிப்பது போன்றவற்றைக் கூடச் செய்யலாம்.

அயர்ந்து தூங்குபவர் எழுந்தால் அவரின் போதனை எப்படி இருக்கிறதோ அதுவே நீங்கள் கேட்டதற்கான பதிலும்.



**இத்தனை அழிவுகளையும் சந்தித்த இனத்திற்கு இறுதியில் விடுதலையும் இல்லை. இனப்படுகொலைக்கான நீதியே இல்லாது போய் விட்டதே?**

சுதன்-குப்பிளான்

இதற்கான முழுப்பொறுப்பையும் எமது தமிழ அரசியல் தலைவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆம் 2009 இற்குப் பின்னர் தமிழினத்தின் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய பொன்னான வாய்ப்புக்களை எல்லாம் தெரிந்து கொண்டே நழுவ விட்டவர்கள் எமது தலைவர்கள்.

சர்வதே அரங்கில் நின்று இலங்கை அரசுக்கு பொறுப்புக் கூற கால அவகாசம் கொடுக்கலாம் என நாசம் செய்வதர்கள் எம் தலைவர்கள்.

அன்று எமக்கான நீதியை சர்வதேசமே தா என்று ஒரு வார்த்தை கூறியிருந்தால் இன்று தமிழினம் இவ்வாறு இன்னலப்படாது.

அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

0076 097 3126

என்ற இலக்கத்திற்கு SMS, Whats App செய்யுங்கள்

**வாழ்க்கை பற்றி தங்களின் கருத்து என்ன? அதை இவ்விடத்தில் பதிவிட முடியுமா வியாசரே?**

தரன்-மாதகல்

முள் குத்தும் வலியை விட அதை எடுக்கும் போது தான் அதிகம் வலிக்கும்.

அதுக்காக முள்ளுடனேயே வாழ்க்கை நடத்த முடியாதே. அதை அப்புறப் படுத்துவதற்கு கஷ்டப்பட்டுத்தான் ஆக வேண்டும். அதில் ஏதும் தவறு இல்லை.

என்னதான் விளக்கம் சரியா?



எப்படிப் படுத்தாலும் தூங்க முடிய வில்லை வியாசரே. தூக்கம் வருகிறதே இல்லை. என்ன செய்யலாம்?

**இறைவன் இருக்கிறாரா இல்லையா வியாசரே?**

மிதுஸ்-யாழ்ப்பாணம்

1996 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் இராணுவ அரண்களில் பதுங்குகுழி வெட்ட இளைஞர்களை அழைத்துச் செல்வது வழமை.

அன்று நானும் எனது நண்பனும் அழைத்துச் செல்லப்பட்டிருந்தோம்.

அந்தக் காலத்தில் இராணுவத்தினால் சினப்பர் தாக்குதல் மேற்கொள்ளப்படும் அதற்கு அவதானத்துடன் இருக்க வேண்டும்.

நான் முன்னே நின்றேன். எனக்குப் பின் இன்னொருவர். நான் மண் வெட்டியை தூக்கி வெட்ட அது மண்ணில் புதைந்து விடவே சற்று குனிந்தேன். ஒருகணப்பொழுது.

டுமில் என்ற சத்தம் எனக்கு சமாந்தரமாக பின்னுக்கு நின்றவர் சரிந்து வீழ்ந்தார்.

எனக்கோ அவருக்கு குண்டுபட்டு விட்டது என்ற கவலையும் நான் உயிருடன் இருப்பதின் அதிசயத்தையும் நினைத்தேன். கடவுள் என்ற சக்தி இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

**செம்மணிப் புதைகுழி அகழ்வு எப்போது நிறைவு பெறும் வியாசரே?**

லகேசன்-மல்லாகம்

போகிற போக்கினைப் பார்த்தால் ஈழ எல்லையான பொத்துவில் முதல் பொலி கண்டி வரை தமிழினத்தின் புதைகுழியாகத்தான் இருக்குமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

நாளுக்கு நாள் செம்மணிப் புதைகுழி அகழ்வின் செய்தியைப் பார்க்கும் போது தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட இன்னல் போல உலகின் வேறு எந்த இனத்திற்கும் நடந்திராது போலத் தோன்றுகிறது.

உடல் எச்சங்களுடன் சிறுபிள்ளைகளின் பொம்மைகள், பால்போச்சி, காப்பு என்பன வெளியாவது அந்தக் கொடூரத்தை விபரித்து நிற்கிறது.

**யுத்தம் நடந்த மண்ணில் புதைகுழிகள் இருக்கவே செய்யும் என உதய கம்மன்பில கூறுகிறாரே**

கணேஸ்-பருத்தித்துறை

உதய கம்மன்பில தமிழினத்துக்கு எதிராக இனவாதத்தை கக்கும் ஒருவர்.

ஆயினும் அவரின் மேற்குறித்த கருத்து தமிழினத்தின் மனங்களை காயப்படுத்துவதாய் இருப்பதை அவர் புரிந்து கொள்வார் என்று நாம் நினைக்கவில்லை.

என்ன சொல்வது உங்களுக்கு வந்தால் இரத்தம் எங்களுக்கு வந்தால் தக்காளிச் சட்டினி என்ற மிகப் பயங்கர நிலையிலேயே இன்னும் சில பெரும்பாண்மை அரசியல் வாதிகள் இருக்கிறார்கள் என்பதை நினைக்கும் போது மனம் ரணமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கர்ண" பரம்பரையின் கலக்கம் தீர சட்டங்கள்...!



தழுவியபின் நழுவுகிற
தந்தையரின் கயமையினால்
பிறப்பினைப் பதிவு செய்ய
பெற்றவள் படும் பாடு!

"முறைப்படி பெற்றோர்கள்
முடித்தாரா திருமணம்?"
"தந்தையின் ஒப்பமும்
தந்திட வேண்டும்...!"
கேள்விகளால் வேள்வி செய்து
பயமுறுத்தும் பதிவாளர்!

களங்கம் சுமந்தவளோ
கருவிலே மழலையினை
கலைப்பதும் உண்டு..!
தப்பிப் பிறந்தாலோ
புதைப்பதும் உண்டு...!
கண்ட இடங்களிலே
கை விடலும் உண்டு...!
ஆயுள் பலத்தாலே
அத்தனையும் தாண்டி வர
வாழ்க்கைத் தாச்சியிலே
வறுபடுமே பிள்ளை...?

கலங்கும் கர்ணன்களின்
களங்கம் தணிக்கவென
வருகிறதாம் சட்டங்கள்...
வாழ்த்தி வரவேற்போம்...!

**கவிஞர் இரா.ஜெயக்குமார்**
**உரும்பிராய்,**
**யாழ்ப்பாணம்.**

# பேனாவின் குமுறல்



இதயங்கள் இயங்க மறுத்தன
மானிடம் மரணித்து
மரண ஓலங்கள் ஓங்கி ஒலித்து
ஊமையா உறங்கி
மண்ணுக்குள் புதையுண்டு
புழுதியை போர்வையாக்கி
புழுப்போல் துடித்து
இதயங்கள் இயங்க மறுத்து
பிஞ்சுகளின் பஞ்சு முகங்கள்
வெந்தணலில் வெதும்பி
நாளதுவும் வஞ்சகப் பேரலையால்
வஞ்சியவள் கஞ்சிக்கு
காத்திருந்து கனத்த மனத்தோடு
கண்ணீரால் கஞ்சிக்கதை
பகிர்ந்த நாளதுவும்.
ஓயும் முன்னே
வாழ்வும் சாவும் சங்கமிக்க
கண்ணீர்த்துளிகள்
கடலலையை விஞ்சி நிற்க
கண்ணீராலும் செந்நீராலும்
களியாட்டம் கண்ட நாளதுவும்
நாளும் நினைவுகளால் சுட்டெரிக்க
சத்தமின்றி யுத்தமின்றி மௌனமாய்
செம்மணிக்குள் செருக்களமாடி
மனவெளி கொண்டு
பேசாது பெருவெளியில்
மூச்செறிந்து மூச்சிழந்து
விடையின்றி விட்டுப்போன
எங்கள் அவல நாட்களை
எழுதிட எண்ணிலடங்கா
எத்தனை பேனாக்கள் என்னும்

**சசி. சுயா**
**குடத்தனை**

# ஏழை வீடு

சூரியன் வந்தால் என்ன?
சந்திரன் வந்தால் என்ன?
ஒரு வேளை உணவுக்கு
ஒரு மந்திரம் சொன்னால் என்ன?

விறகு இருக்கின்றது பானை இருக்கின்றது
அரிசி இல்லா வீட்டிலே ஆசையாய்
வளர்த்த பூனையும் வேறுவழி பார்க்கின்றது



**கவிக்கிறுக்கன் - இணுவில்**

# கவிதைக் கலசம்


## அன்பு வாசகர்களே!

**உங்கள் அபிமான**
**சங்குநாதத்தில் நீங்களும்**
**எழுதலாம்...**

அரசியல் | இலக்கியம் | கவிதை | கட்டுரை

**ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.**

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191. பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


# காலா காலம்



பகல் பொழுதை இருளாக்கி
இருளை ஒரு கணம் பகலாக்கி
வானத்திரை கிழித்து
பளிச்சிட்டு படரும் - ஒரு
மின்னல் கோலம்

கவலையிலே
நான் கரைந்திருந்தாலும்
மகிழ்வினிலே இன்று
மகிழ்ந்திருந்தாலும்
மனத்திரை விழித்து
பட்டுத் தெறிக்கிறது - உன்
நினைவுக்காலம்

உலகின் உன்னத நிறைவுகளும்
புலர்வின் உயிரான வனப்புகளும்
காலத்திரை கழித்தும்
நின்றாடிப் போகிறது- ஒரு
ஊமை உலாக்காலம்

**வயவை அ. ஆனந்தன்**

# புரியாத புதிர்



**- சத்திரியன் -**

கல்வியில் வடபுலம் இன்று
கடைசி இடமென்று
கண்டவரும் கிண்டல் அடித்திட
கண்ணீர் வடித்து மனம் வருந்திது!

முன்னொரு காலத்தில் நாமே
முதலிடமென்று பல்கலைக்கழக அனுமதிக்காய்
முட்டி மோதி போராட்டமும் செய்து
முடிவில் பூச்சியமானோமே இன்று!

ஆசிரியர் மீது குற்றம் சாட்டி
அதனை மூடி மறைத்திட செய்து
ஆய்வும் செய்து முடிவும் எடுத்தும்
ஆக பெற முடியவில்லை இங்கு!

ஆசிரியர் மட்டும் பொறுப்பல்ல புரிவீர்!
அர்ப்பணிப்பில்லா பெற்றோரும் பொறுப்பல்லோ!
அதிகார துஷ்பிரயோகம் செய்யும் அதிகாரிகளோடு
அனைத்து சூழல் காரணியும் பொறுப்பல்லோ!

காவாலித் தனமும் கூடியது இங்கு
கஞ்சாவும் போதைப் பொருளும் கூடிடவே
கருக்கலைக்கும் மாணவியரும் கூடிடவே
காரணம் யார் என்று தெரியாதா உனக்கு!

சட்டமும் நீதியும் எங்கே போனது
சட்டத்தை மீறு காவலும் கண்டோம்
சாக்கடை வேலைப் பாதுகாப்பு உணருதே
சரியான மேய்ப்பர் அற்று போனோம் நாமே!

பயிரை நாசம் செய்யும் பூச்சி போல்
பாடசாலை மாணவரை கொன்றிடும்
போதையும் பண்பாடு இழந்த
சமூக கட்டமைப்புப் பாழாக்கி போட்டு
விட்டினம் இன்று

செல்லிடத் தொலைபேசியும் சீரழிக்க
சொல்லுக் கடங்காத சமூகமும் மேலோங்க
செல்லரித்த பக்கங்களாய் வட்டு
சொல்லிட முடியா துயரில் விட்டு இன்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான பாதை

**இலங்கையின் மீட்சிக்கான பாதை:** கடன் மற்றும் ஆளுகை எனும் தொனிப்பொருளில் கடந்த யூன் மாதத்தில் இலங்கை மத்திய வங்கி, நிதியமைச்சு மற்றும் சர்வதேச நாணய நிதியம் இணைந்து முக்கியமானதொரு மாநாட்டினை நடாத்தியிருந்தன.

இதில் கலந்தாலோசிக்கப்பட்டிருந்த முக்கியமாக பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டிய விடயங்களை தொகுத்து வழங்கும் நோக்கில் இந்தக் கட்டுரைத் தொகுதி தயாரிக்கப்படுகின்றது.

இது 5 கட்டுரைகளைக் கொண்டிருக்குமென்பதுடன் இந்த முதலாவது கட்டுரை அதன் ஆரம்ப அமர்வில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், இலங்கையின் ஜனாதிபதி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட துணை முகாமைத்துவப் பணிப்பாளர் போன்றோரினால் ஆற்றப்பட்ட உரைகளில் எடுத்தியம்பப்பட்ட முக்கிய விடயங்களை தொகுத்து வழங்குகின்றது.

**சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதி: முக்கிய விடயங்கள்**

2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சமூகப் பொருளாதார நெருக்கடி நிலைமைகளைத் தொடர்ந்து பொருளாதாரத்தினை மீண்டும் உறுதிநிலைக்கு கொண்டுவரும் நோக்கில் புதிய பொருளாதார நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடங்குவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் 2023 இல் புதிய நிதி வசதியான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி (IMF-EFF) தொடங்கப்பட்டது. இது இலங்கைக்கான 17ஆவது நிதி வசதியாக அமைந்ததுடன் மொத்தமாக ஏறத்தாழ 3.0 பில்லியன் டொலர் தொகை கொண்ட நான்கு வருட காலப் பகுதிக்கான கடன் வசதியாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியானது வெறுமனே நிதியை வழங்குவது மாத்திரமன்றி நாட்டின் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக தேவைப்படுகின்ற சீர்திருத்தங்களைத் தேவை ப்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டமாக அமைகின்றது.

அது மாத்திரமன்றி உலகளாவிய ஆர்வலர்கள், அதாவது ஏனைய கடன்வழங்குநர், முதலீட்டாளர்கள், கடன்தரப்படுத்தல் நிறுவனங்கள், ஏனைய நாடுகள் போன்றவற்றிற்கு கடன்பெறும் நாடு தொடர்பான நம்பிக்கையை வழங்கக்கூடிய ஒரு மூன்றாம் தரப்பாகவும் சர்வதேச நாணய நிதியம் காணப்படுகின்றது. இதன் காரணமாக உலகளாவிய ரீதியாக அங்கத்துவ நாடுகள் தாம் வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடி ஏற்படும் போது நேர காலத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவினை நாடுவது வழக்கம். இலங்கையின் தற்போதைய வசதியானது இறைத்திரட்சி (அரச வருமானத்தை அதிகரித்தல்). பாதிப்படையக்கூடிய மக்களுக்கான சமூகப்பாதுகாப்பு. பொதுக் கடன் நிலைபேறானத்தன்மையை (debt sustainability) மீட்டெடுத்தல். விலை உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதும் வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதும், நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல், ஆளுகை மற்றும் ஊழல் பற்றிய பிரச்சினையைத் தீர்த்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான சீர்திருத்தம் போன்ற முக்கிய தூண்களை உள்ளடக்கிய பொருளாதார நிகழ்ச்சித்திட்டமாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

**பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையின் மீட்சியும் சீர்திருத்தங்களும்**

கடந்த மூன்று ஆண்டுகளின் முன்னர் நாடு எதிர்நோக்கிய மிக மோசமான பொருளாதார நிலைமையும் அதற்கான முக்கிய காரணங்களைப் பற்றிய விரிவான கலந்துரையாடல் மாநாட்டின் தனியானதொரு அமர்வில் இடம்பெற்றதுடன் அது தொடர்பான விடயங்கள் அடுத்த கட்டுரையில் விரிவாக ஆராயப்படும். இலங்கை பல தடவைகள் வெளிநாட்டுச் செலாவணிக்கான நெருக்கடி தொடர்பான பிரச்சினைக்கு முகம்கொடுத்திருந்த போதிலும் அதனுடன் இணைந்து பொதுப் படுகடன் நெருக்கடி நிலைமைக்கு உட்பட்டமை இதுவே முதற் தடவையாக அமைந்தது. இதன் காரணமாக இதிலிருந்து மீட்சியடைவதற்கான முயற்சிகளும் சீர்திருத்தங்களும் கடந்த காலங்களை விட கடுமையாக அமைந்தன. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சியடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட தீவிரமான கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களினால் பொருளாதார மீட்சி அடையப்பட்டுள்ளது.

*இவ்வாறு அடையப்பட்ட பொருளாதார உறுதிப்பாடானது ஒரு முடிவல்லவென்றும் இது எதிர்காலத்தில் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கும் நாட்டின் மீண்டெழும் தன்மையை கட்டியெழுப்புவதற்கும் அத்திவாரமாக அமைய வேண்டுமெனவும் மத்திய வங்கியின் ஆளுநரான கலாநிதி நந்தலால் வீரசிங்க குறிப்பிட்டார்.*

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கியமானதும் நீண்ட காலத்தில் பொதுமக்களுக்கும் நாட்டிற்கும் நன்மையளிக்கக்கூடியதுமான சீர்திருத்தங்களாக மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மையை மேம்படுத்துவதற்காகவும், பொது நிதியின் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்காகவும் அதே போன்று ஊழலினை ஒழிப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட முக்கிய சட்ட மூலங்கள் இயற்றப்பட்டமை கலாநிதி கோபிநாத்தினாலும் மத்திய வங்கியின் ஆளுநராலும் குறிப்பிடப்பட்டன.

இவை எதிர்வரும் காலத்தில் பொருளாதார முகாமைத்துவத்துடன் தொடர்புடைய நிறுவனம்சார் மற்றும் ஆளுகைக் கட்டமைப்பையும் மேம்படுத்தியுள்ளதுடன் நிறுவனங்களின் பொதுமக்களுக்கான பொறுப்புக்கூறும் தன்மையை (accountability) வலுப்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

*பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டமை விரைவானதாகவும் ஏனைய நாடுகளின் அனுபவங்களுடன் ஒப்பிடுமிடத்து தனித்திருப்பதாகவும் கலாநிதி கீதா கோபிநாத் குறிப்பிட்டதுடன் இதற்கு அரசாங்கம் உட்பட அனைத்து ஆர்வலர்களின் பங்களிப்பையும் பொதுமக்களின் தியாகங்களையும் அவர் பாராட்டினார்.*

**இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செய்முறையில் எதிர்கொண்ட சவால்கள்**

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுகின்ற செய்முறையில் இன்றியமையாததும் கடினமானதுமாகக் காணப்பட்டதொரு விடயம் இலங்கையானது வெளிநாட்டு நாணயக் கடன் மீள்செலுத்தலை தற்காலிமாக இடைநிறுத்தியதும் கடன்மறுசீரமைப்பினை முன்னெடுத்ததுமாகும். இச் செய்முறையில் காணப்பட்ட முக்கிய சவால்கள் பற்றிப் பார்க்கலாம்.

**(1) போதுமானளவிற்கு கடன் நிவாரணத்தை வழங்கக்கூடிய வாறு கடன் இலக்குகள் நிர்ணயிக்கப்பட வேண்டியமை**

இந்த முயற்சியில் கடன் வழங்குநர்களிடமிருந்து (creditor) பெறப்படும் நிவாரணம் மற்றும் கடின மான உள்நாட்டு கொள்கைச் சீராக்கங்கள் இரண்டையும் உள்ளடக்க வேண்டியிருந்தமையும் கடன் நிலைபேறான தன்மை மீள் அடையப்பட வேண்டியிருந்தமையும் ஒரு கடினமான விடயமாக விருந்தது. இதன்படி கடன்வழங்குநரின் ஒத்துழைப்புடன் கடன் மறுசீரமைப்பினூடாக கணிசமானளவு நிவாரணம் கிடைக்கப் பெற்றிருக்கின்றது.

அடுத்துவரும் தசாப்தத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வெளிநாட்டுக் கடன்


கலாநிதி. சுஜீதா ஜெகஜீவன்

பணிக் கொடுப்பனவு (debt service) அரைவாசியாகக் குறைக்கப்பட்டிருப்பதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வெளிநாட்டு கடனானது 27% இனாலும் மொத்தப் பொதுக்கடன் இருப்பு 34% இனாலும் குறைக்கப்பட்டிருக்கின்றது.

**(2) சிக்கல்வாய்ந்த வெளிநாட்டு கடன்வழங்குநர்களின் தொகுப்பு**

தாழ்ந்த வருவாய் கொண்ட நாடுகளின் கடன் மறுசீரமைப்பிற்கு பரிஸ் கிளப் அமைப்பினூடாக ஏற்கனவே நன்கு பரிசோதிக்கப்பட்ட கடன் மறுசீரமைப்பு முறையொன்று காணப்படுகின்றது. ஆனால், இலங்கை போன்ற நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கு இவ்வாறானதொரு அமைப்பு காணப்படவில்லை.

இந்த நிலையில் இலங்கையின் கடன் கடன் மறுசீரமைப்பிற்காக பிரான்ஸ், இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளின் தலைமையில் அலுவல்சார் கடன் வழங்குநர்களின் குழு வொன்று (Official Credit Committee, OCC) உருவாக்கப்பட்டதுடன் சீனாவானது அலுவல்சாரா அடிப்படையில் இந்தக் குழுவுடன் இணைந்து செயற்பட்டது.

இருந்தபோதிலும் கடன் மறுசீரமைப்பிற்காக தேவைப்படும் தகவல்களை வேறுபட்ட கடன் கொடுநர்கள் குழுக்களிடையில் பகிர்ந்துகொள்ளல் மற்றும் தீர்வின் ஒப்பீட்டுத் தன்மை (Comparability of Treat ment) பற்றி கடன்வழங்குநர்களிடையே காணப்பட்ட கரிசனைகள் தொடர்ந்தும் சவால்மிக்கதாகவேயிருந்தன.

**(3) கடன்மறுசீரமைப்பிலிருந்து எழக்கூடிய நிதியியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவைப்பாடு**

இலங்கையின் கடனில் உள்நாட்டின் கடனின் பங்கு அதிகமாக விருந்தமையி னால் வெளிநாட்டுக் கடனின் மறுசீரமைப்பு மாத்திரம் கடன் நிலைபேறானதன்மையை மீட்டெடுப்பதில் போதுமானதாக இருக்க வில்லை.

(12 ஆம் பக்கம் தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம்: கலங்கரை விளக்கம்

பாடியவர்: Tm சௌந்தர்ராஜன்

வரிகள்: கண்ணதாசன்



நான் காற்று வாங்கப் போனேன்
ஒரு கவிதை வாங்கி வந்தேன்
அதைக் கேட்டு வாங்கிப் போனால்
அந்தக் கன்னி என்ன ஆனாள்
நான் காற்று வாங்கப் போனேன்
ஒரு கவிதை வாங்கி வந்தேன்
அதைக் கேட்டு வாங்கிப் போனால்
அந்தக் கன்னி என்ன ஆனாள்

நடை பழகும்போது தென்றல்
விடை சொல்லிக்கொண்டு போகும்
நடை பழகும்போது தென்றல்
விடை சொல்லிக்கொண்டு போகும்
அந்த அழகு ஒன்று போதும்
நெஞ்சை அள்ளிக் கொண்டு போகும்
அதைக் கேட்டு வாங்கிப் போனால்
அந்தக் கன்னி என்ன ஆனாள்

நான் காற்று வாங்கப் போனேன்
ஒரு கவிதை வாங்கி வந்தேன்....

நல்ல நிலவு தூங்கும் நேரம்
அவள் நினைவு தூங்கவில்லை
நல்ல நிலவு தூங்கும் நேரம்
அவள் நினைவு தூங்கவில்லை
கொஞ்சம் விலகி நின்ற போதும்
என் இதயம் தாங்கவில்லை
அதைக் கேட்டு வாங்கிப் போனால்
அந்தக் கன்னி என்ன ஆனாள்

நான் காற்று வாங்கப் போனேன்
ஒரு கவிதை வாங்கி வந்தேன்.....

என் உள்ளம் என்ற ஊஞ்சல்
அவள் உலவுகின்ற மேடை
என் உள்ளம் என்ற ஊஞ்சல்
அவள் உலவுகின்ற மேடை
என் பார்வை நீந்தும் இடமோ
அவள் பருவம் என்ற ஓடை
அதைக் கேட்டு வாங்கிப் போனால்
அந்தக் கன்னி என்ன ஆனாள்

நான் காற்று வாங்கப் போனேன்
ஒரு கவிதை வாங்கி வந்தேன்
அதைக் கேட்டு வாங்கிப் போனால்
அந்தக் கன்னி என்ன ஆனாள்

(11 ஆம் பக்க தொடர்ச்சி...)

அது மாத்திரமின்றி உள்நாட்டு கடனின் பெரும் பகுதி உள்நாட்டு நிதியியல் நிறுவனங்கள், பொது ஓய்வூதிய நிதியங்கள் மற்றும் மத்திய வங்கியின் வசமிருந்தன. எனவே, பாரியளவிலான நிதியியல் நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகவும் சமூகப் பிரச்சினைகளைக் குறைப்பதற்காகவும் கடன்பெறுமதியில் குறைப்பினை ஏற்படுத்தாமல் வட்டி வீதங்களை குறைப்பதிலும் முதிர்ச்சிக்காலத்தை நீடிப்பதிலும் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பில் கவனஞ்செலுத்தப்பட்டது. இவ்வாறான பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. இலங்கையின் இந்தச் சிக்கலானகடன் மறுசீரமைப்பு செய்முறையானது எதிர்வரும் காலத்தில் ஏனைய பல நாடுகளின் கடன்மறுசீரமைப்பை இலகுபடுத் துவதற்கு வழிசெய்துள்ளது.

### சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய நிதி வசதி இலங்கையின் இறுதியான நிதி வசதியாக மாறுமா?

முதன்மை உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொருளாதாரம் நிலை குலைந்திருக்கும் சந்தர்ப்பத்தில் உண்மையான தேசிய இறைமையை அடைந்து கொள்ள முடியாத நிலை இருப்பதனை வலியுறுத்தியதுடன் தற்பொழுது பொருளாதார உறுதிப்பாடு படிப்படியாகக் கட்டியெழுப்பப்படுவது பற்றி குறிப்பிட்டார். தற்பொழுது அடையப்பட்டுள்ள மேல்வாரியான பொருளாதார உறுதிப்பாடு மாத்திரம் போதாதெனவும் பொருளாதார முறைமையை மாற்றியமைப்பதற்கும் பொருளாதார நன்மைகள் அனைவரையும் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்கும் இன்னமும் மேற்கொள்ளப்படுவது அவசியமென வினைத்திறன்வாய்ந்த அடிப்படையில் அரச சேவைகளை வழங்கவேண்டிய தேவைகளையும் செலவினைச் சிக்கனப்படுவதற்காக சில அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான அல்லது முடிவுறுத்துவதற்கான தேவைபற்றியும் அவர் வலியுறுத்தினார்.

அடுத்ததாக, இலஞ்சம் மற்றும் ஊழலினை ஒழிக்க வேண்டிய தேவை பற்றிய ஆழமான கருத்துக்களை அவர் வெளியிட்டிருந்தார். இலஞ்சம் மற்றும் ஊழல் என்பது வெறுமனே கொடுக்கல் வாங்கல்களாக மாத்திரமில்லாமல் இன்றியமையாத செயற்றிட்டங்கள் நிராகரிக்கப்படுவதையும் தேவையற்ற செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுவதையும் குறித்து நிற்குமென அவர் குறிப்பிட்டார். மேலும், வறியவர்கள், கிராமங்களில் வசிப்போர் மற்றும் பாதிப் படையக்கூடிய சமூகத்தினர் பொருளாதாரத்துடன் நெருக்கமாக ஒருங்கிணைக்கப்படுவதும் அவர்களுக்கான நன்கு இலக்கிடப்பட்ட நிதி ஆதரவினை வழங்குவதும் அரசின் கடப்பாடு என்பதனை நிலைநிறுத்தினார்.

பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதில் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை கவர்தலின் பங்கினையும் அதற்காக முதலீட்டினை ஊக்குவிப்பதற்கான சூழலினை உருவாக்குதல் மற்றும் உபாயகரமான சலுகைகளை வழங்கு தல் போன்றவற்றின் முக்கியத்துவத்தினையும் வலியுறுத்தினார். முக்கியமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் மீட்சிக்காக இலக்கிடப்பட்ட சலுகைகளை வழங்குவதிலும் கிராமிய சமூகங்களை பிரதான பொருளாதா ரத்துடன் ஒருங்கிணைத்துக் கொள்வதிலும் அரசாங்கத்தின் ஈடுபாட்டினையும் அதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பினையும் நாடினார்.

*பன்னாட்டு நாணய நிதியத்தின் தற்போதைய நிதிய வசதியானது இலங்கைக்கான கடைசி நிகழ்ச்சித்திட்டமாக இருக்கவேண்டுமென்பதே தமது இலக்காகுமென்றும் இதனை அடைந்துகொள்வதற்கும் தேசிய இறையாண்மையினையும் தற்சார்பினையும் மீட்டெடுப்பதும் 2028 ஆம் ஆண்டளவில் எமது கடனைச் சுயாதீனமாக மீளச்செலுத்துவதற்கான உறுதியான பொருளாதாரத்தினை மீட்டெடுப்பதும் இறுதிக்குறிக்கோளாகுமென ஜனாதிபதி வலியுறுத்தினார்.*

ஒட்டுமொத்தமாக பார்க்கையில், இந்த அனுபவங்களிலிருந்து கிடைக்கப்பெறும் முக்கிய பாடமென்பது இவ்வாறான பொருளாதார சிக்கல்களுக்கும் கடன் மறுசீரமைப்பிற்கு உட்படாதவரையில் பொருளாதாரத்தைக் கட்டியமைப்பதுவும் முகாமைசெய்வது மாகும். பொருளாதாரச் சிக்கலிலிருந்து மீள்வதற்காக இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் பொதுமக்களுக்கு பல்வேறு வகையிலும் சுமையாகவிருந்திருக்கின்றன.

இருந்த போதிலும், அவை நிலையான எதிர்காலத்திற்கும் எதிர்கால சந்ததியினருக்கும் அடிப்படையாகவுள்ள சீர்திருத்தங்களாகும். நீண்டகால பொருளாதார சுபீட்சத்தினைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கையின் குறுங்கால அர்ப்பணிப்புகள் தவிர்க்க முடியாதவை. இலங்கையில் அதிகரித்திருக்கின்ற வறுமையைக் குறைப்பதற்கு பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான மேலதிகச் சீர்திருத்தங்கள் அவசியம். ஊழலினை ஒழிப்பதற்காக அடையாளம் காணப்பட்டுள்ள செயற்பாடுகள் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியிருப்பதுடன் எதிர்காலத்தில் பொதுக் கடன் மீண்டும் நிலைபேறற்ற தன்மைக்கு திரும்பாமல் இருப்பதற்கு தற்பொழுது முன்னெடுக்கப்படும் அரச இறைச் சீராக்கங்கள் தொடரப்பட வேண்டும்.

உலகளாவிய சூழல் முன்னெப்பொழுதுமில்லாதவாறு பாதகமானதும் நிச்சயமற்றதாகவும் மாறியுள்ளது. இந்தச் சூழலில் சீர்திருத்தங்களைத் தொடர்வது மேலும் சிரமமாகவிருக்கும். இருப்பினும், தேவைக்கு முன்கூட்டியே சீர்திருத்த நிகழ்ச்சிநிரலிலிருந்து விலகுவது எந்த வகையிலும் இதற்கு தீர்வாக அமையாது.

*கடந்த காலங்களில் சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து பல தடவைகள் விலகியிருந்தமையும் அதன் பின்விளைவுகளும் இலங்கைக்கு நன்கு பரீச்சயமானவை. எனவே, அனைவரையும் உள்ளடக்கிய வகையில் பொருளாதார சீர்திருத்தங்களைத் தொடர்வதும், இதற்காக அனைவரது ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வதும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதும் இம்முறை இந்த நிதிய வசதி வேறுபட்டதாக இருப்பதனையும் இலங்கைக்கான இறுதி நிகழ்ச்சித் திட்டமாக மாறுவதையும் உறுதிப் படுத்தும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிச்சயம் மாற்றம் வரும்!



புத்தரின் பிரசங்கங்கள் பிரசித்தி பெற்றவை. அவர் பிரசங்கம் செய்யும்போது, சீடர்கள் மட்டுமல்ல, உள்ளூரைச் சேர்ந்தவர்களும் அமர்ந்து கேட்பது வழக்கமான ஒன்று. சில நேரங்களில் வெளியூரைச் சேர்ந்தவர்களும் புத்தரின் உரையைக் கேட்க வருவார்கள். அப்படி ஒருவர் புத்தரின் சமய உரையைக் கேட்க வந்தார்.

அந்த மனிதர் தினமும் வருவார். புத்தர் சொல்லும் போதனைகளை கவனமாகக் கேட்பார். மனதில் நன்கு பதியவைத்துக் கொள்வார். பிரசங்கம் முடியும் வரை வேறு எதிலும் கவனத்தை திசை திருப்ப விடமாட்டார். இப்படியே ஒரு மாதம் கழிந்தது. அன்று புத்தர் பேசி முடித்தார். ஒவ்வொருவராக எழுந்தார்கள். அந்த மனிதர் மட்டும் எழுந்து போகாமல் காத்திருந்தார். எல்லோரும் போனதும் புத்தரிடம் வந்தார். "புத்தபிரானே, உங்களிடம் ஒன்று கேட்கலாமா?

"கேளுங்கள்...."

"நான் கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக உங்கள் பிரசங்கத்தைக் கேட்க வருகிறேன். நீங்கள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் காது கொடுத்துக் கேட்கிறேன்." நீங்கள் சொன்ன அத்தனை போதனைகளும் என் நினைவில் இருக்கின்றன. ஆனால், அவற்றால் என் வாழ்க்கையில் எந்த மாற்றமோ, விளைவோ ஏற்படவில்லை. இப்போதெல்லாம் என்னிடம்தான் ஏதோ குறை இருக்கிறதோ என்று யோசிக்க ஆரம்பித்து விட்டேன்.

நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?

"சிராவஸ்தி நகருக்கு அருகிலிருக்கும் ஒரு கிராமத்திலிருந்து வருகிறேன்."

"அங்கிருந்து இங்கே எப்படி வருகிறீர்கள்?

"சில நேரங்களில் குதிரை வண்டி அல்லது மாட்டு வண்டியில் வருவேன். சில நேரங்களில் நடந்தும் வருவேன்.

"நல்லது. நீங்கள் இப்போது இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள். உட்கார்ந்தபடியே வீட்டுக்கு உங்களால் திரும்பிப் போக முடியுமா?

"உட்கார்ந்து கொண்டே வீட்டுக்குப் போவதாவது அது எப்படி முடியும்." மாட்டு வண்டியிலோ, குதிரை வண்டியிலோ போக வேண்டும் அல்லது நடந்தால்தான் வீட்டுக்குப் போகமுடியும்.

அதேதான். நீங்கள் சொன்னபடி நகர்ந்தால்தான் அதாவது, வண்டியிலோ, நடந்தாலோதான் போய்ச் சேரவேண்டிய இடத்தை அடைய முடியும். அதேபோல வாழ்க்கையில் மாற்றம் வேண்டுமென்றால், ஒருவர் என் போதனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். போதனைகளை வெறுமனே கேட்பதால் மட்டும் மாற்றம் வந்துவிடாது. என் அறிவுரைகளை வாழ்க்கையில் பயன்படுத்திப் பாருங்கள். என் வழியைப் பின்பற்றுங்கள். பிறகு உங்கள் வாழ்க்கையில் பெரும் மாற்றம் நிகழ்வதை நீங்களே உணர்வீர்கள்.

அந்த மனிதர் புத்தபிரானை வணங்கி விட்டு, தன் ஊரை நோக்கி நடந்தார்.

**மாற்றம் வரும்!**

# ஆச்சி அறிவுரை



## நஞ்சில்லாத உணவே ஆரோக்கியமானது

**பேராண்டி...**

"தவறு என்பது தவறிச் செய்வது
தப்பு என்பது தெரிந்து செய்வது
தவறு செய்தவன் திருந்தப் பார்க்கனும்
தப்புச் செய்தவன் வருந்தி ஆகனும்"

**"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி..."** எண்டுற எம்.ஜி ஆரின் பாட்டிலை வாற வரிகள் இது.

ஓம் பேராண்டி.

எங்கட ஆக்கள் பலர் தவறு செய்து திருந்த மறந்து தப்புச் செய்யினம். வருந்தித்தானே ஆகவேணும்.

ஆனால் எங்கட ஆக்கள் செய்யிற தப்பு எங்கட எதிர்காலச் சந்ததியையே அழிச்சுக் கொண்டிருக்குது.

இதைத் தெரியாமல், தொடர்ந்து தப்புச் செய்து கொண்டிருக்கிறம் நாங்கள்.

பேராண்டி! புற்றுநோய் எவ்வளவு உயிர்கொல்லி நோயெண்டு உனக்குத் தெரியுமோ? ஒரு காலத்திலை புற்றுநோய் எண்டுறது ஒரு அரிதான நோயா இருந்துது. ஆனால் இப்ப அது பெரும் அச்சுறுத்தலா இருக்குது.

வயது வித்தியாசம் இல்லாமல் இந்தக் கொடிய நோயாலை பலர் பாதிக்கப்பட்டு இறந்து கொண்டிருக்கினம்.

தெல்லிப்பளையிலை இருக்கிற புற்றுநோய் வைத்தியசாலைக்குப் போனால் வாழ்க்கை எண்டால் என்ன எண்டுறது புரியும் பேராண்டி.

பிறந்த பச்சப் பிள்ளைகளுக்குக்கூட புற்றுநோய் எண்டு நினைக்க ஈரக்குலை பதறுது. அதுகள் சாவுக்கு நாள் குறிச்சு கிடந்து துஞ்சுறதைப் பார்த்தால் என்னடா இது வாழ்க்கை எண்டு வெறுத்துப் போகும்.

இதுக்கெல்லாம் ஆர் காரணம் எண்டு நினைக்கிறாய். நாங்கள்தான் பேராண்டி.

இண்டைக்கு சாப்பாட்டிலை நஞ்சில்லாத சாப்பாடு எண்டு ஏதும் இருக்குதோ? அந்தளவுக்கு விவசாயத்திலை இரசாயனங்களைக் கொட்டி பயிர்களை விளைவிச்சு, அதனூடா எங்கட எதிர்கால சந்ததியை இந்தக் கொடிய நோய்க்கு ஆளாக்கிட்டம்.

பயிர் விளையவேணும். நான் காசு உழைக்க வேணும் எண்டு நினைக்கிற நாங்கள் இப்பிடி இரசாயன உரங்களைக் கொட்டி விளைவிக்கிறதாலை ஏற்படுகிற பாதிப்புக்கள் தொடர்பில சிந்திக்கிறதில்லை.

பேராண்டி! எங்கட தாத்தா பாட்டி நூறு, நூற்றுப் பதினைஞ்சு வயது வரைக்கும் வாழ்ந்தவை. அவைக்கு இந்தச் சுகர், பிறசர், கான்சர் எண்டு எந்தக் கோதாரி வருத்தமும் இல்லாமல் வாழ்ந்தவை.

ஆனால் நாங்கள் இயற்கையை விட்டுட்டு, செயற்கைக்கு மாறி எங்களையும் அழிச்சு எங்கட எதிர்காலச் சந்ததியையும் அழிச்சுக் கொண்டிருக்கிறம்.

பள்ளிக்கூடத்திலை அல்லைப்பிட்டி விவசாயி கிருஷன் அண்ணன் குரக்கன் கஞ்சி தந்தவரெண்டு சொன்னனி எண்டு கொம்மா சொன்னவள்.

அந்தத் தம்பிதான் நஞ்சில்லாத விவசாயத்துக்காக பாடுபடுகிது. பாப்பம் மாற்றம் ஏதும் வருமோ எண்டு.

**ஆச்சி வருவா...**

**மாவை.நா.கஜேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உணவே மருந்து



உண்ட உணவு செரிமானம் ஆகிவிட்டது என்பதை அறிந்து பசி எடுத்த பின், அடுத்தவேளை உணவு உட்கொள்ள வேண்டும் அவ்வாறு உண்டால், ஒரு மனிதனின் உடலுக்குத் தனியாக மருந்து என எந்தவொரு தேவையும் இருக்காது, அந்த உணவே மருந்தாகும் என்று சொல்கிறது திருக்குறள்.

முறையான உணவை, சரியான நேரத்தில், சரியான அளவில் எடுத்துக் கொள்வது அவசியம். உணவு உட்கொள்ளும் முறைகள் பற்றி "ஆசாரக் கோவை" என்ற தமிழ் நூலில் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தக் குறிப்புகள் பற்றிய விளக்கங்களைப் பார்ப்போம்.

**கிடந்து உண்ணார் நின்று உண்ணார்**
**வெள்ளிடையும் உண்ணார்**
**சிறந்து மிக உண்ணார் கட்டில்மேல் உண்ணார்**
**இறந்து. ஒன்றும் தின்னற்க. நின்று! - (பாடல் 23)**



**கருத்துரை**

சாப்பிடும்போது சாய்ந்து படுத்துக்கொண்டோ, நின்று கொண்டோ சாப்பிடக்கூடாது. விரும்பிய உணவாக இருந்தாலும் வயிறு புடைக்க உண்ணக்கூடாது. வெட்ட வெளியில் நின்று உண்ணக்கூடாது. அதேபோல் கட்டில் மேல் அமர்ந்தும் உண்ணக்கூடாது.


**கைப்பன எல்லாம் கடை. தலை தித்திப்ப.**
**மெச்சும் வகையால் ஒழிந்த இடை ஆக.**
**துய்க்க. முறை வகையால். ஊண் - (பாடல் 25)**

**கருத்துரை**

உணவில் உள்ள இனிப்பான பண்டங்கள் மற்றும் கறிகளை முதலிலும், கசப்பு சுவையுடைய பண்டங்களை இறுதியிலும், மற்ற சுவைகளைக் கொண்ட உணவுகளை இடையிலும் உண்ண வேண்டும்.

உணவு உட்கொள்ளும் அரைமணி நேரம் முன்பு டீ அல்லது காபி போன்ற எந்தவொரு பானத்தையும் அருந்தக்கூடாது. அதேபோல், உணவு அருந்திய பின் ஒரு மணிநேரம் இடைவெளிவிட்ட பிறகு இதுபோன்ற பானங்களை அருந்த வேண்டும்.

இன்று பலர் அறுசுவைகளில் கசப்பு மற்றும் துவர்ப்பு சுவையுடைய உணவுகளை உண்பதில்லை. இது முற்றிலும் தவறு. அவற்றையும் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். உணவை நன்கு மென்று, கூழாக்கி உமிழ்நீருடன் சேர்த்து விழுங்க வேண்டும்.



உணவு உண்ணும்போது இடையிடையே தண்ணீர் குடிப்பதைத் தவிர்க்கவும். விருப்பமான உணவாக இருந்தாலும், வயிறு நிறைய உண்ணாமல் முக்கால் வயிறு அளவிற்கு உண்பதே நலம்.

# அடுக்களைப் பக்கம்



**01.** பண்டிகை நேரத்தில் இரண்டு நாட்கள் முன்பே மொத்தமாக வாழைப்பழங்களை வாங்கி வந்துவிடுவோம். இவை மொத்தமாகப் பழுத்துவிடும். அதைப் போக்க தேவையான அளவு பழங்களை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு மீதியுள்ளவற்றின் காம்புப் பகுதியை அலுமினிய ஃபாயில் கொண்டு சுற்றி வைக்கலாம். நமக்குத் தேவைப்படும்போது சுற்றி வைத்துள்ள அலுமினிய ஃபாயிலை நீக்கிவிட்டால் விரைவிலேயே பழுத்துவிடும்.

**02.** வாழையிலையைப் பின்புறமாகத் தணலில் காட்டி, அதன்பிறகு உணவைப் பொட்டலமாகக் கட்டினால், இலை எவ்வளவு மடக்கினாலும் கிழியாது.

**03.** பூரிக்கு மா பிசையும் போது ஒரு டீஸ் பூன் கடலை மா சேர்த்துப் பிசைந்தால் நல்ல நிறத்துடன் பூரி சுருங்காமல் வரும்.

**04.** தண்ணீரைக் கொதிக்க வைத்து இறக்கி, அதில் முழு வாழைக்காயை ஐந்து நிமிடங்கள் போட்டு எடுத்து, சிப்ஸ் சீவினால் சீராக வரும் சீக்கிரம் மொறு மொறுப்பாகும்.

**05.** சப்பாத்திக்கான மாவைப் பால் காய்ச்சிய பாத்திரத்தில் வைத்துப் பிசைந்தால் தனியாக எண்ணெய் சேர்க்க வேண்டிய அவசியம் இருக்காது. சப்பாத்தி மிருதுவாகவும் சுவையாகவும் இருக்கும்.



# சமைப்போம் சுவைப்போம்



## உருளைக்கிழங்கு வேர்க்கடலை பீட்சா

### தேவையானவை :

கோதுமை மா – 100 கிராம்
மைதா – ஒரு டேபிள் ஸ்பூன்
கராட் – ஒன்று
உருளைக்கிழங்கு – 2
உப்பு – சிறிதளவு
மிளகுத்தூள் – தேவைக்கேற்ப
கறிமசாலா பவுடர் – சிறிதளவு
எண்ணெய் – தேவையான அளவு
சோள மா – ஒரு டேபிள் ஸ்பூன்
பெரிய வெங்காயம் – ஒன்று
குடமிளகாய் – ஒன்று
பீட்சா சீஸ் – 2 டேபிள் ஸ்பூன்
வேர்க்கடலைப் பொடி – ஒரு டேபிள் ஸ்பூன்



### செய்முறை

கரட், வெங்காயம், குடமிளகாய், ஓர் உருளைக் கிழங்கு முதலியவற்றை சன்னமாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். ஓர் உருளைக்கிழங்கை வேகவைத்து மசிக்கவும். நறுக்கிய காய்கறிகளுடன் கோதுமை மா, மைதா, சோள மா, கறி மசாலா பவுடர், உப்பு, சிறிதளவு மிளகுத்தூள், வேகவைத்து மசித்த உருளைக்கிழங்கு மற்றும் வேர்க்கடலைப் பொடி சேர்த்து சிறிதளவு தண்ணீர் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். தோசைக் கல்லை சூடாக்கி பிசைந்து வைத்த கலவையைச் சப்பாத்தி போன்று கல்லின் மேல் பரப்பி விடவும். எண்ணெய் ஊற்றி அதை வேக வைத்து, திருப்பிப் போடவும். பின்னர் அதன் மேல் பீட்சா சீஸைப் பரப்பி விடவும். அதை மூடி வைத்து, சீஸ் வெந்து படரும் வரை வைத்திருந்து, அடுப்பை அணைத்து, மேலே சிறிதளவு மிளகுத்தூள் தூவிப் பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தலைமுறையினர் வேலை செய்ய ஏன் தயாராக இல்லை?



2000ஆம் ஆண்டிற்குப் பின் பிறந்த இன்றைய தலைமுறையினருக்குப் பெரியவர்கள் ஒன்றும் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை. 1960களில் பிறந்தவர்களைவிட 1980களில் பிறந்தவர்கள் தங்கள் இலட்சியங்களையும் இலக்குகளையும் கொஞ்சம் உயரத்தில் வைக்கப் பழகிவிட்டனர். 2000ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்களோ, அதைவிட உயரமான பாதைகளை இலக்காக வைத்துக்கொண்டு செல்கிறார்கள். “பெரியவர்கள் அவர்களுக்குச் சரியான வழிகாட்டியாக இருந்தால் போதும், இன்னும் சில இளம் தலைமுறையினருக்கு அதுவும் தேவைப்படப் போவதில்லை”.

1980 வரை பிறந்தவர்களுக்குக் கிடைக்காத தகவல் தொழில்நுட்ப வசதி இப்போதைய தலைமுறையினருக்கு வெகு இலகுவாகக் கிடைக்கிறது. கை நுனியில் உலகமே அவர்களது தேடலில் வந்து விடுகிறது.

சில நிறுவன முதலாளிகளிடம் பேசும்போது அவர்கள் சொல்லும் பொதுவான கருத்து, “இப்ப வருகிற பிள்ளைகள், அது ஆணோ, பெண்ணோ, டெக்னாலஜியிலும் டெக்னிக்கல் விடயங்களிலும் தேறிவிடுகிறார்கள். ஆனால், மூளையை உபயோகித்து ஒரு வேலையைச் செய்யவோ, அல்லது உடல் உழைப்பைக் கோரும் வேலையையோ அவர்கள் விரும்புவதில்லை”.

இப்போதெல்லாம் வேலை நிறைய இருக்கின்றன. ஆனால் அந்த வேலைகளைச் செய்ய இப்போதைய தலைமுறையினர் தயாராக இல்லை. இது இப்போதிருக்கும் இளம் தலைமுறையினர் மீது தவறான அபிமானத்தையே உருவாக்கும்.

வேலைக்கு வந்த புதிதில் நெடுநாட்கள் ஒரே நிறுவனத்தில் வேலை பார்ப்பவர்கள் என அரிதாக சிலர் கண்ணில் படுவார்கள். அவர்களுக்கு அந்தத் துறையில் பெரிய மரியாதை உண்டு. அந்த நிறுவனத்திற்குள்ளே இல்லாவிட்டாலும், அந்தத் துறையைச் சார்ந்தவர்களாலோ அல்லது சமூகத்திலோ பெரிய அளவில் அவர்கள் மதிக்கப்படுவார்கள்.

ஒரு வங்கிக்குச் சென்று நீங்கள் கடன் பெற அனுமதி கேட்டு நிற்கும்போது, “இத்தனை வருடம் ஒரே நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன்” என்று சொல்லிப் பாருங்கள். உங்கள் உழைப்பின் மீது, உங்கள் ஒழுக்கத்தின் மீது, உங்கள் நேர்மையின் மீது நீங்கள் சொல்லாமலேயே ஓர் ஈர்ப்பு ஏற்படும்.

ஒரு வீடு வாடகைக்குப் பார்க்கச் செல்ல வேண்டுமானாலும்கூட உங்களது சுய அறிமுகத்தை, நீங்கள் நெடுநாள் ஒரே நிறுவனத்தில் இருப்பதே சொல்லிவிடும்.

“இப்ப வருகிற பிள்ளைகள் ஒரு வருடம்கூட நிற்பது இல்லை”. ஒரே பாட்டில் “படையப்பா” ரஜினி மாதிரி பெரிய பணக்காரன் ஆக வேண்டும் என்று அடுத்தடுத்த கம்பனி என்று ஓடிவிடுகிறார்கள். கடைசியில் எங்கேயும் நிலைக்க முடியாமல் வாழ்க்கையை தொலைத்துவிட்டு நிற்கிறார்கள்”

சில நிறுவனங்களின் வேலைக்கு ஆள் எடுப்பதிலேயே சில வழக்கங்களை வைத்திருப்பார்கள். அனுபவமிக்க ஆட்கள் நேர்காணலுக்கு வரும்போது, எத்தனை வருடங்கள் பழைய நிறுவனத்தில் வேலை பார்த்திருக்கிறார் என்று நோட்டமிடுவது ஒரு வழக்கம்.

ஒரு நிறுவனத்தில் புதியதாய்ச் சேரப்போகும் போது, இந்த இடத்தில் என்ன கற்றுக்கொள்ளப் போகிறோம், இந்த வேலை நம் வாழ்வில் எந்தவித பங்களிப்பைத் தரப்போகிறது, எவ்வித அனுபவங்களால் நாம் நிறைய மெருகேறப் போகிறோம் என்பதில்தான் முதல் சிந்தனை இருக்க வேண்டும்.

ஆனால், பெரும்பாலும் வருபவர்கள், எவ்வளவு சம்பளம் என்பதில்தான் குறியாய் இருக்கிறார்கள்.

உங்களின் மதிப்பு, உங்கள் வாழ்க்கையின் மதிப்பு, வெறும் பணத்தினால் மட்டும் நிரப்பப்படுவதில்லை என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**தொழில் செ(ய்)ய விரும்புவோம்...**

# தெளிவே என் சிந்தனையுள்... 20

ஒரு பொய்யை ஒன்பது பேர் சேர்ந்து உண்மை என வாதிட்டால், அந்தப் பொய் உண்மை ஆகிவிடும் என்று கூறுவார்கள்.

நிச்சயம் அது முட்டாள்தனமான கருத்து.

முதலில் மெய் என்பது என்ன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். சிவனை மெய்யானவன் என்கிறோம். ஆதியும் அந்தமும் அறிந்தவன் என்பதை பலமாக நம்புகிறோம்.

அவ்வாறெனில், எப்படி பொய் மெய்யாகும். இதை எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா?

ஊரில் பொய்யை மெய்யாக்கும் சூட்சுமந் தெரிந்தவர்கள் இருப்பர். அவர்களுக்குத் தெரிவதில்லை இது தம்மைத் தாமே மூடராக்கும் செயல் என்பது.

மெய், பொய் என்பது மனம் சார்ந்தது.

ஒருவன் தனது சாதுரியத்தால் பொய்யை மெய்யாக்கியதாய் நினைத்துக்கொள்ளலாம். ஆனாலும் அவனது மனதிற்கு அது பொய் என்பது நன்கு தெரிந்திருக்கும்.

என்னதான் அரக்ககுணம் கொண்டவராயினும் தன் மனச் சாட்சிக்குப் பதில் சொல்வதில் மெய்யைப் பொய் வெல்லாது.

**அன்பானவர்களே!**

இந்த மகா தத்துவத்தைப் புரிந்துகொள்ளாமல் பாவச் சுமையை எம் பரம்பரைக்கு ஏற்றிவைத்த பழிச்சொல்லுக்கு ஆளாகிவிடாதீர்கள்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ்.கோட்டை



65

## செங்கை ஆழியான்

தமிழ்ப்பொலிசார் மீது இராணுவத்தினருக்கு நம்பிக்கையற்ற நிலை இருந்தது. இவர்கள் இருவர் சந்தித்து நீண்டநேரம் கதைத்தால் போதும், இவர்களைப்பிரித்து வெவ்வேறு பகுதிகளில் உள்ள காவலரண்களுக்கு மாற்றிவிடுவார்கள். பல நாட்கள் பொலிஸாரைக் காவலரண்களில் விடும்போது அவர்கள் அரண்களில் கடமை நேரத்தில் நித்திரை செய்வதும் உண்டு இது இராணுவத்தினருக்குத் தெரிய வந்தால் தண்டனை வழங்கப்பட்டு மேலும் பல நாட்கள் தொடர்ந்து காவலரண்களில் நிறுத்தப்படுவார்கள். மிகவுயர்ந்த தண்டனையாக கோட்டை மதிலின் மேல் ஏறிநிற்கும்படி பணிக்கப்படுவார்கள்.

இப்படி ஏறி நின்ற சில பொலிஸ்காரரர் புலிகளின் சினைப்பர் தாக்குதலில் கொல்லப் பட்டனர். கொல்லப்படும் பொலிஸ் இராணுவத்தினரின் உடல்களை முகாமின் ஒதுக்குப்புறங்களில் புதைப்பார்கள். சிறு காயம் அடைந்தவர்களுக்கு மட்டும் இங்கு மருத்துவ சிகிச்சையளிக்க வசதியிருந்தது.

போர் மூண்ட காலத்தில் கோட்டையின் உள்ளே தமிழ்ப் பொலீஸாரால் ஓரளவு சுதந்திரமாக நடமாடமுடிந்தது. ஆனால் முகாம் மீது புலிகள் மேற்கொண்ட பசீலன் 2000 ஷெல் தாக்குதல்களைத் தொடர்ந்து இராணுவத்தினர் நிலை தடுமாறி பதுங்குழிகளில் கூடியளவு நேரத்தைக் கழித்தனர்.

காவல் அரண்களில் இருப்பவர்களும் அந்தந்த இடங்களிலேயே பல நாட்கள் நிலை கொண்டனர். மலம் கழிப்பதற்காக மட்டும் அரண்களைவிட்டுக் கீழே இறங்குவர். இதனால் இவர்கள் குளிப்பதற்கோ ஓய்வெடுப்பதற்கோ நேரம் கிடைக்கவில்லை.

புலிகளின் தாக்குதலால் கட்டடங்கள் உடையும் சமயங்களில் கட்டட கூரைப்பகுதி மரங்களை இராணுவத்தினர் சேகரித்துத் தமது பதுங்கு குழிகளைப் பலப்படுத்துவார்கள். விமானப்படையின் அவ்ரோ வீசும் பீப்பா குண்டுகள் ஓரிரு தடவைகள் கோட்டை முகாமிற்குள்ளும் விழுந்தன. ஒரு நாள் உள்ளே விழுந்த குண்டினால் இரு இராணுவத்தினரும் ஒரு பொலிஸாரும் கொல்லப் பட்டனர் மீண்டும் ஒரு நாள் பீப்பாய்குண்டு விழுந்து வெடித்ததில் ஒரு இராணுவவீரர் கொல்லப்பட்டார்.

இச்சந்தர்ப்பங்களில் ஏனைய இராணுவத்தினர் விமானப்படைமீது கோபம் அடைந்தனர் புலிகள் கோட்டை மீது தாக்குதலைத் தீவிரப் படுத்தியபோது பலாலி முகாமிலிருந்து கோட்டைப்பகுதி நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் குண்டுகள் கோட்டையின் உள்ளும் விழுந்து வெடித்ததால் இரு இராணுவ வீரர்கள் கொல்லப் பட்டனர்.

(தொடரும்...)

# இனிப்பும் கசப்பும்




# கடற்புறா

அந்த இறகின் எழுச்சியைத் தொடர்ந்து மற்றும் சில உருளைகள் சுழன்ற சத்தம் மீண்டும் கேட்டது. அடுத்த விநாடி பக்கப் பலகையில் சில பகுதிகள் சின்னஞ்சிறு கதவுகளாகத் திறந்ததன்றி அவை ஒவ்வொன்றிலிருந்தும். பெரும் ஈட்டி ஒன்றும் வெளிவந்தது. மறு படியும் ஈட்டிகள் திடீரென உள்ளடங்கின.

பின்னடையச் செய்து கண்டியத்தேவன் இறகுகளைப் பழையபடி இறக்க உத்தர விட்டான். இறகுகள் இறங்க, பயங்கர ஈட்டிகள் மறைய, பழையபடி அழகு பெற்ற அந்தக் கடல்புறாவைப் பெரும் மலைப்புடன் பார்த்தான் பலவர்மன். எந்த உணர்ச்சியையும் காட்டாத அவன் வஞ்சக முகத்திலும் உணர்ச்சிகள் தாண்டவமாடின. "பயங்கரம்! பயங்கரம்!" என்ற சொற்களும் பயத்துடன் அவன் இதழ்களிலிருந்து உதிர்ந்தன.

இளையபல்லவன் இதழ்களில் இளநகை விரிந்தது. "பலவர்மரே! இந்தப் பறவையும் இந்தக் கோட்டையைப் போலத்தான். அழகும் பயங்கரமும் நிறைந்தது. இந்த மரக்கலத்தைப் போரில் வெல்வது எளிதல்ல. இதன் சூட்சுமத்தில் ஒரு பகுதியைத்தான் உமக்குக் காட்டியிருக்கிறேன். இது முழுதும் தயாராகட்டும். மீதியைக் காட்டுகிறேன்." என்றான் படைத் தலைவன் குரலில் மகிழ்ச்சி ததும்ப.

"முழுதும் தயாராகிவிட்டது படைத்தலைவரே" திடீரெனக் குறுக்கே புகுந்தது கண்டியத் தேவனின் குரல். இளையபல்லவன் அவனை ஒரே விநாடி நோக்கினான். "நல்லது நல்லது தேவரே! இத்தனை சீக்கிரம் மரக்கலத்தை அமைத்துவிடுவீர் என்று நான் எதிர்பார்க்கவில்லை" என்றும் சொன்னான். ஏதோ விளங்காத ஒலி படைத்த குரலில். முடிந்துவிட்டது படைத்தலைவரே, இன்றே கடலோடவும் போர் புரியவும் இந்த மரக்கலத்தால் முடியும்.

உங்கள் உத்தரவுக்குத்தான் காத்திருக்கிறேன், என்றான் கண்டியத்தேவன். எதற்கு உத்தரவு? என்று வினவினான் படைத்தலைவன்.

நீரில் மரக்கலத்தை மிதக்கவிட." என்றான் தேவன். இதைக் கேட்ட பலவர்மன் முகத்தில் திடீரெனப் பயத்தின் சாயை படர்ந்தது. அதைக் கண நேரத்தில் கவனித்த இளையபல்லவன் திருப்திக்கு அடையாளமாகப் பெருமூச்சு விட்டான். பிறகு கூறினான் சில நாட்கள் போகட்டும் தேவரே," எனறான். மிதக்கவிடவா! தேவன் குரலில் வியப்பு ஒலித்தது.

ஆம்

"தண்ணீரிலிருந்தால்தான் மரக்கலத்துக்குச் சக்தி உண்டு. தெரியும். கரையில் கிடக்கும் மரக்கலம் கரையிலிருக்கும் முதலையைப் போன்றது. சக்தியற்றது."

அதுவும் தெரியும்.

"தெரிந்துமா...!" மேற்கொண்டு பேசவில்லை தேவன். அவன் முகத்தில் வெறுப்பு அதிகமாக மண்டிக் கிடந்தது.

ஆம், தெரிந்துதான் சொல்கிறேன். இன்னும் சில தினங்கள் இது கரையில் இருக்கட்டும். நீரில் இருந்தால் இது துறைமுகத்தைத் தடுத்து நிற்கும். மற்ற மரக்கலங்கள் துறைமுகத்தில் நுழைய முடியாது." என்றான் இளைய பல்லவன்.


அவன் உத்தரவு மேலும் மேலும் பிரமிப்பையே அளித்தது கண்டியத் தேவனுக்கு. "மற்ற மரக்கலங்களைத் தடை செய்வதுதானே போர்க்கலத்தின் தொழில்! அதை ஏன் தடுக்கிறார் இவர்?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகம் 10; விஜய் சேதுபதி!

சி னி மா



**1.** அவுட்டோர் ஷூட்டிங் போகும் போது மலைகளிலிருந்து கூழாங்கற்களைச் சேகரித்து வருகிறார். "இது வெறும் கல் அல்ல, நூற்றாண்டின் மிச்சம்!" என்று உறுதிபட நம்புகிறார். பழைய பைக் குகளையும், குழந்தைகளுக்கான சிறு கார்களையும் சேகரித்து வருகிறார்.

**2.** "அப்பா" எனச் சிறகடித்து அழைக்கிறார் "முருகன்." விஜய் சேதுபதியின் ஸ்பரிசத்தால் "முருகன்" அமைதியாகிறார். ஆம், தன் முதல் கதாபாத்தி ரத்தின் பெயரையே தான் வளர்க்கும் கிளிக்குச் சூட்டியிருக்கிறார்.

**3.** பி.காம் படித்திருக்கிறார். பொதுவுடைமையும் சமூக நீதியும் அவரின் நிலைப்பாடு. எதிர்காலத்தில் இயக்கு நராகும் எண்ணம் இருக்கிறது. இயக்குநர்களோடு உரையாடுவது, புத்தக வாசிப்பு என முன்தயாரிப்பில் இருக்கிறார்.

**4.** அசைவம் பிடிக்கும். "உணவு விடயத்தில் நான் கொடுத்து வைத்தவன். என் மனைவி, மருமகள், தங்கை, அம்மா, மாமியார் என எல்லோரும் சமையலில் கெட்டி" என்கிறார். தனக்கும் சமையல் ஓரளவு வரும் என்பதில் அவருக்குப் பெருமிதம்!

**5.** "நாத்திகம் என்பது கடவுள் நம்பிக்கைக்கு எதிரான தில்லை. கடவுளின் பெயரால் நடத்தப்படும் மூடநம்பிக் கைகளுக்கு எதிரானது. கடவுள் இருப்பதால்தான் நிறைய பேர் மனநோயாளியாக ஆகிவிடாமல் இருக்கி றார்கள்!" என நம்புகிறார். வில்லிபுத்தூருக்கு அருகில் தைலாகுளத்தில் குலதெய்வம் காளி கோயில் இருக்கி றது.

**6.** மறைந்த இயக்குநர் ஜனநாதன் மீது பெரும் மரியாதை உண்டு. உலக அரசியலை, கம்யூனிசப் பார்வையை எளியவர்களுக்கும் கொண்டு போய்ச் சேர்த் தவர் என்று ஆராதிக்கிறார். அவர் சொன்னதற்காக 100 years of Cinema கொண்டாடியபோது பலருக்குக் கோடி களில் உதவி செய்திருக்கிறார்.

**7.** இளையராஜா மீது பெரும் பிரியம். தன் பென்ஸ் காரில் பயணிக்கும்போது, "ராசாத்தி உன்னை காணாத நெஞ்சு", "சுந்தரி கண்ணால் ஒரு சேதி" பாடல்களை ராகத்தோடு பாடப்பிடிக்கும். வாழ்வின் முக்கிய சாதனைகளாக இளையராஜா வீட்டிற்குப் போய் உரையாடியதையும், தியாகராஜன் குமாரராஜாவைத் தெரிந்து வைத்திருப்பதை யும், "கடைசி விவசாயி" மணிகண்டனைப் புரிந்து வைத்தி ருப்பதையும் கருதுகிறார்.

**8.** இக்கட்டான சூழல்களில் அப்பாவின் வழிவந்த தைரியம் துணை இருப்பதாக நம்புகிறார். "அப்பா சிறந்த அறிவாளி. கோயிலுக்கு குடும்பத்தோடு போவார். சபரிமலைக்கு மாலை போடுவார். ஆனா லும் அப்பா நாத்திகர்தான்!" என்று சொல்லிச் சிரிப்பார்.

**9.** பியானோ, ஆர்மோனியப் பயிற்சியில் இருக்கிறார். "பிறர் முன்னால் திறமையைக் காட்டும் போதுதான் அது பாரமாகும். நேசித்துக் கற்கும்போது சுகமாக இருக்கி றது!" என்கிறார். 28 வயதான கேரளாவின் அபிஷேத் தான் குரு. "சமீபத்தில் ஸ்வரம் உட்கார்ந்து விட்டது" என குரு சொன்னபோது அவருக்குப் பாதி உலகை ஜெயித்த உணர்வு.

**10.** குழந்தைகளோடு நடிக்கும் போது அவர்களு க்குத் தினம் தினம் பரிசுப் பொரு ட்களை வாங்கிக் கொடுத்து சகஜமாகப் பேசி அவர்களை மகிழ்ச்சிப்படுத்துவார்.



விஷால் மிகவும் மாறிவிட்டார். தினமும் அவரது அலுவலகத்திற்கு வந்து நடப்புகளை கவனிக் கிறார். அதே மாதிரி காலையிலேயே எழுந்து சைக்கிளிங், நடைப்பயிற்சி மேற்கொள் கிறார். எல்லாம் தன்ஷிகா அவர் வாழ்க்கையில் வந்த பிறகு வந்த மாற்றங்கள். இன்னும் ஆறு மாதங் களில் அவரை முற்று முழுதாக மாற்றிக் காட்டுவதாகச் சொல்லியிருக்கிறாராம்



சென்னைக்கு வரும்போதெல்லாம் பாடகி சின்மயி வீட்டுக்கு விசிட் அடித்து, அவருடைய ட்வின்ஸ் குழந்தை களுடன் விளையாடுவதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கி றார் சமந்தா. அதேபோல, ஒவ் வோர் ஆண்டும் சின்மயி வீட் டில் நடக்கும் நவராத்திரி விழா விலும் கலந்துகொள்ளத் தவறு வதில்லை.



முழுக்க முழுக்க ஹிந்திப் படங்களிலேயே அதிக கவனம் செலுத்தி வருகிறார் தமன்னா. அங்கே ரோஹித் ஷெட்டி, சித்தார்த் மல்ஹோத்ரா ஆகியோரின் படங்களில் நடி த்துவரும் அவர், சமீபத்தில் வெளியாகி ஓடிக்கொண்டிருக்கும் அஜய் தேவ்கனின் "ரைடு 2" படத்தில் ஒரு பாடலுக்கு ஆட்டம் போட்டிருக்கிறார். ஏற்கெ னவே, ரஜினியின் "ஜெயிலர்" படத்தில் இதேபோல ஆட்டம் போட்ட தமன்னா, "ஜெயிலர்-2" படத்திலும் ஒரு பாடலு க்கு ஆட வாய்ப்பு வரும் என எதிர்பார் த்துக் காத்திருக்கிறார் என்கிறார்கள்.



ஒரே நேரத்தில் மூன்று படங்களில் நடித்து வருகிறார் ராகவா லாரன்ஸ். அவரது ஹிட் ஜானரான "காஞ்சனா 4" படத்தைத் தயா ரித்து, நடித்துவரும் அவர், அப்படியே லோகேஷ் கனகராஜ் தயாரித்துவரும் "பென்ஸ்" படத்தின் படப்பிடிப்பிலும் பிசி. இவற்றுடன், பெயரிடப்படாத ஒரு தெலுங்குப் படத்திலும் நடித்துக் கொண்டிருக்கிறார் லாரன்ஸ்.



நாகேஷின் பேரனும் ஆனந்தபாபுவின் மகனுமான கஜேஷ் நாகேஷ், ஹீரோவாக நடித்திருக்கும் படம் "உருட்டு உருட்டு". அந்தப்பட விழாவுக்கு வந்திருந்த இயக்குநர் கஸ்தூரி ராஜா, "தனுஷை அறிமுகப்படுத் தத் தயாரிப்பாளர்களை நான் தேடிப்போகவில்லை. நானே தயாரிப்பாளராகவும், இயக்குநராகவும் இருந் தேன். ஆனால், ஆனந்த்பாபு தன் பையனுக்காக ஒவ்வொரு பட கம்பெனிக்கும் போனார். அந்தத் தந்தையினுடைய வலி எனக்கும் தெரியும். அவர் மகன் நடிக்கும் இந்தப் படத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும்" என்று பேசவும், மேடையில் நெக்குருகி உட்கார்ந்திருந்தார் ஆனந்த்பாபு.



"தலைவன் தலைவி" படத்தின் மூலம் விஜய் சேதுபதி, இயக்குநர் பாண்டிராஜ் இடையேயான நட்பு, வெகுவாக வலுத்திருக்கிறது. "2009இலிருந்து பாண்டிராஜ் சாரை எனக் குத் தெரியும். நான் "தென்மேற்குப் பருவக்காற்று" படத்திற் காக தேசிய விருதை வென்றபோது இருவரும் சந்தித்துப் பேசியிருக்கிறோம். இப்போது அவரது படத்தில் நடித்தி ருப்பது எனது கரியரில் ஒரு மிகப்பெரிய வட்டம் நிறை வடைந்தது போல் இருக்கிறது" என்று நெகிழ்கிறாராம் விஜய் சேதுபதி. இருவரும் மீண்டும் இணைவதற்கான சூழலும் உருவாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

455

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## சமயக்கருத்துகள் விஞ்ஞான மயப்படுத்தப்பட வேண்டும்

ஆரோக்கியம் என்பது நோயற்ற நிலை மாத்திரமல்ல அதனுடன் உள, சமூக, ஆன்மீக, சுற்றாடல் நன்னிலையும் சேர்ந்த ஒரு உன்னத நிலையே உண்மையான சுகம் என்று பல உலக சுகாதாரவிற்பன்னர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். மத ஆன்மீக நம்பிக்கை மனிதனை பூரணப்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பதுடன் மதமும் மருத்துவமும் மனிதனின் சுகாதார மேம்பாட்டிற்கான இரண்டு கண்களாகவும் இருக்கின்றன.

இந்து சமயத்தின் அடிப்படைத் தத்துவங்கள் கி.மு. 3500 வருடங்களுக்கு முன் சிந்துவெளிப் பிரதேசத்திலே தோற்றம் பெற்றிருந்ததாக புதைபொருள் ஆராய்ச்சிகள் சான்று பகர்கின்றன. ஆனால் தற்போது அறியப்படாமல் இருக்கும் வேறு சில மதங்களின் அடிப்படைக் கருத்துக்கள் அதற்கு முன்னதாகவே தோற்றம் பெற்றிருக்கக்கூடும்.

அக்காலப்பகுதியில் மருத்துவப்பொருட்கள், அறுவை மருத்துவம், நோய்த்தடுப்பு முறைகள் ஆகியவை அக்கால மக்களால் அறியப்பட்டிருந்தன என்பதற்கான வரலாற்று சான்றுகள் பல கிடைக்கப்பெற்றிருக்கின்றன.


சிந்துவெளிப் பிரதேசத்தில் தோற்றம் பெற்ற இந்துமதக் கருத்துக்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு அது இந்துமதமாகத் தோற்றம்பெற்றது கி.மு.1500 வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதி என்று கருதப்படுகிறது. இதனை வேதகாலம் என்று சொல்லுவார்கள். இந்த வேதகாலத்திலே மதப்பெரியவர்கள் மருத்துவத்தொண்டையும் ஆன்மீகத் தொண்டையும் ஒருங்கே ஆற்றி வந்ததற்கான சான்றுகள் தென்படுகின்றன.

பல கிறிஸ்தவ மத நிறுவனங்களும் இந்துமத நிறுவனங்களும் மருத்துவச்சேவைக்குப் பெரும் பங்காற்றி வருகின்றன. உளவளத் துணைக்கும் பாதிக்கப்பட்டவர்களின் ஆற்றுப்படுத்துகைக்கும் கிறிஸ்தவ அமைப்புகள் ஆற்றி வரும் பங்கு அளப்பரியது. பல மதம்சார்ந்த அமைப்புகள் வைத்தியசாலைகளையே வழிநடாத்தி வருகின்றன.

திராவிடர்களின் மருத்துவ முறையாக வளர்ச்சி பெற்ற சித்த மருத்துவத்தின் தத்துவங்கள் ஆரம்பத்திலே சிவனினால் சக்தியிடம் கையளிக்கப்பட்டு சக்தி அதனை நந்தியிடம் கொடுத்து நந்தி அதனை சித்தர்களிடம் சேர்ப்பித்தார் என்று பண்டைய நூல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தத்துவங்கள் ஆரம்பத்திலே 18 சித்தர்களினால் கையாளப்பட்டிருக்கின்றன. இந்த சித்தர்களிலே முக்கியமானவராக அகத்தியர் இருந்திருக்கிறார்.

இந்த அகத்தியரின் தலைமையிலேயே சித்த மருத்துவம் முழுமையாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இந்த கருத்துக்களை நம்புகிறோமோ என்பது முக்கியமல்ல.

ஆனால் அக்காலத்திலிருந்தே மதமும் மருத்துவமும் ஒருங்கிணைந்து செயற்பட்டிருக்கின்றன என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்த அண்டசராசரங்கள் அனைத்தினதும் இயக்கத்திற்கு அடிப்படையாக இருப்பது Energy என்று சொல்லப்படுகின்ற சக்தி என்பது உலகறிந்த உண்மை. சக்தி இன்றி எதுவும் இயங்க முடியாது. அந்த சக்திதான் சிவனின் சரிபாதி என்றும் அவள் தான் அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறாள் என்றும் இந்து மதம் சொல்கிறது. இந்த உடல் இயக்கமும் சக்தியும் தான் மருத்துவத்திற்கு அடிப்படையாக விளங்குகிறது.



தினமும் அதிகாலையில் எழுந்து குளித்து தோய்த்து உலர்ந்த ஆடை தரித்து கோயிலுக்கு சென்று கோயிலை 3 தடவை வலம் வந்து ஆசனங்கள், அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்து இறை வணக்கம் செய்ய வேண்டும் என்று இந்துமதம் சொல்லுகிறது. இங்கே உடைச்சுத்தம், உடல்சுத்தம், உடற்பயிற்சி, மன அமைதி என்ற நான்கு சுகாதார அறிவுரைகள் அடங்கி இருக்கின்றன.

பஞ்சமாபாதகங்களை தவிர்க்குமாறு மதங்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றன. இந்த பஞ்சமாபாதகங்களில் அடங்கியிருக்கும் கள், காமம் எனப்படுகின்ற மது அருந்துதல் தகாத பாலியல் தொடர்புகள் என்பவற்றை தவிர்த்து விடுவதன் மூலம் AIDS போன்ற பல கொடிய தொற்றுநோய்களிலிருந்தும் ஈரல், நரம்புகள், சம்பந்தமான நோய்களிலிருந்தும் எம்மை தற்காத்துக் கொள்ள முடியும்.

விரத காலங்களிலே மாப்பொருள் தவிர்த்து பால், பழங்கள், உண்ணும் மரபு அன்றிலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றது. பால், பழங்களிலே வினைத்திறன் கூடிய புரதங்களும் விற்றமின்களும், கனியுப்புக்களும், நார்ப்பொருட்களும் இருப்பதுடன் இது உடல்நிறையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடிய ஒரு நிறை உணவாகவும் விளங்குகிறது.

சூரிய நமஸ்காரம் எமது வழிபாட்டு முறைகளில் முக்கியமானது. இது காலையில் சூரிய ஒளியிலிருந்து சூரியனை நோக்கி நமஸ்காரம் செய்யும் ஒரு முறையாகும். இதனையே மேலைத்தேச நாடுகளிலே மருத்துவத் தேவைகளுக்காக சன்பாத் என்று செய்து வருகின்றார்கள். இதன் மூலம் பல எலும்பு பல் சம்பந்தமான நோய்களை தடுக்க முடியும் வேதகாலத்திலே தோன்றிய அதர்வண வேதத்தின் உபவேதங்களில் ஒன்றாக ஆயுர்வேத மருத்துவம் கருதப்படுகிறது. சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டுள்ள இந்த மருத்துவத்தில் நோய்களைக் குணமாக்கும் பல மார்க்கங்கள் குறிப்பிடப்படுகின்றன.

சிலப்பதிகாரத்திலே இளங்கோ வடிகள் தமிழ் மருத்துவர்களை ஆயுர்வேதர் என்று குறிப்பிட்டிருக்கிறார். பண்டைய யுத்தங்களிலே காயமுற்றோருக்கு பல சத்திர சிகிச்சைகள் நடாத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. இதற்கு அவர்கள் செப்பு கத்திகளை பயன்படுத்தி இருக்கின்றார்கள். இரும்புக் கத்திகளை பாவித்தால் துருப்பிடித்து அதிலே ஏற்புவலி போன்ற கொடிய நோய்களை ஏற்படுத்தும் கிருமிகள் வளரும் ஆபத்து அதிகமாகக் காணப்பட்டதால் தொற்று நீக்கும் வசதிகளற்ற அந்தக் காலத்திலே புத்திசாதுரியமாக பாதுகாப்பான செப்புக் கத்திகளை அந்தச் சித்தர்கள் பாவித்திருக்கிறார்கள்.

இன்று உலகம் முழுவதும் பிரபல்யம் அடைந்து வரும் யோகாசனப் பயிற்சிமுறையை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவர்கள் சைவசித்தர்களே இன்றும் இந்த யோகாசனப் பயிற்சிமுறை பல தொற்றுநோய்களின் கட்டுப்பாட்டிற்கு பெரும் பங்காற்றி வருகிறது. மனிதனை இறைவன் பகுத்தறிவுடன் படைத்திருக்கிறான் எனவே மதக் கருத்துகளும் மனிதனின் பகுத்தறிவால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தால் மட்டுமே அவை மனிதனை வழிநடத்தும். எனவே மதக்கருத்துக்களும் விஞ்ஞான மயப்படுத்தப்படவேண்டும் என்ற ஒரு தேவை எழுந்திருக்கின்றது.

சிந்துவெளியிலே இருந்த வழிபாட்டு முறைகளுக்கும் வேதகாலத்து வழிபாட்டு முறைகளுக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. உபநிடத காலத்திலே சமயக்கருத்துக்கள் மீள ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன. சங்க காலத்திலே மதக்கருத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு பல விடயங்கள் புதிதாக சேர்க்கப்பட்டு தொகுக்கப்பட்டிருக்கின்றன.


எனவே காலத்திற்கு காலம் காலத்திற்கு ஏற்றாற் போல மீளாய்வு செய்யப்பட்டுவரும் சமயக் கருத்துக்கள் தற்போதய காலத்திற்கு ஏற்ற வகையிலும் மீளாய்வு செய்யப்பட்டு விஞ்ஞானமயப் படுத்தப்படுவது தவறான செயலாகாது.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோர் செம்மணி புதைகுழிக்குள்!

## கஜேந்திரன் தெரிவிப்பு



(அராலி)

செம்மணியில் 100 இற்கும் அதிகமான எலும்புக்கூடுகள் வெளி வந்திருக்கின்றன. இந்த புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் சித்திரவதைகளுக்கும் பாலியல் வல்லுறவுகளுக்கும் உட்படுத்தப்பட்டு கொன்று புதைக்கப்பட்டவர்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் செம்மணியில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துரைக்கையில்,

உணவுத்தடை மற்றும் மருந்து தடை என்பவற்றையும் ஆயுதமாக பயன்படுத்தி அந்த இன அழிப்பு அரங்கேற்றப்பட்டது. அதன் பின்னர் கிட்டத்தட்ட 1980ஆம் ஆண்டுகளின் பிற்பாடு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பல இளைஞர்களும் யுவதிகளும் இலங்கை இராணுவத்தினராலும் அவர்களுடன் இணைந்து இயங்கிய துணை இராணுவ குழுக்களினாலும் கைது செய்யப்பட்டும், கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த இனப்படுகொலைக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கும் உள்ளகப் பொறிமுறை மூலம் எந்தவிதமான நீதியும் கிடைக்காது என்பது தமிழ் மக்களுடைய உறுதியான நிலைப்பாடு.

எனவே எமக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். அது தொடர்பான தீர்மானமானது ஐநாவின் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது எமது கோரிக்கையாக உள்ளது.

ஐநா மனித உரிமைகள் பேரவையில் இந்த பொறுப்பு கூறல் தொடர்பாக 2012ஆம் ஆண்டில் இருந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தாலும் அந்த தீர்மானங்களானது முற்றும் முழுதாக உலக விசாரணையை வலியுறுத்துகின்ற தீர்மானமாகவே இருந்து வந்திருக்கிறது. அதன் காரணமாக இந்த 15 வருடங்களில் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நீதியும் கிடைக்கப்பெறவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வை பெறுவதற்கும் இந்த உள்ளக பொறிமுறை மூலம் தீர்வு பெறுவதற்கு ஒத்துக்கொண்டமையால் இன்று வரைக்கும் அவர்களுக்கான நீதியானது கிடைக்காமல் காணப்படுகின்றது.

ஆகவே இந்த உலக பொறிமுறை நாடகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரை பக்கச்சார்பற்ற ஒரு முழுமையான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். அது தொடர்பான ஒரு தீர்மானம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் எடுக்கப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தலைவர், ஆணையாளர் போன்றவர்கள் இந்த பொறுப்பு கூறல் விவகாரமானது 15 ஆண்டுகள் தோல்வி அடைந்திருக்கின்றது என்ற விடயத்தை ஐ.நா செயலாளருக்கு தெரியப்படுத்தி, அவரிடம் இந்த விடயத்தை பாரப்படுத்தி மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது தான் இந்தப் போராட்டத்தின் குறிக்கோளாக இருக்க முடியும் என்றார். (8-104)



யாழ். அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியின் சண்முகலிங்கம் அன்னலட்சுமி ஞாபகார்த்த விளையாட்டு அரங்கு திறப்புவிழா நேற்று முன்தினம் கல்லூரியின் முதல்வர் கு.பாலகுமாரன் தலைமையில் இடம்பெற்றது. (படம்:கஜிந்தன்)

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் எதிர்வரும் 29.07.2025 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு 41 டிப்பர் மணல், 2 டிப்பர் கிரவல், 3 டிப்பர் மண், 10 துவிச்சக்கர வண்டிகள், 15 தகரங்கள் , 100 தகரபரல் , 50 பிளாஸ்ரிக் கான், 350 சவல்கள் மற்றும் 28 மண் வெட்டிகள் என்பன ஏல விற்பனை செய்யப்படும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

## மெலிஞ்சிமுனை நாரயம்பதி

# தேவாலயத்தினுள் நுழைந்து மாதா சொரூபம் உடைப்பு

### சந்தேகத்தின் பேரில் எண்மர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மது போதையில் மாதா சொரூபத்தை அடித்து உடைத்து , தேவாலயத்திற்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் அரசியல் கட்சி ஒன்றின் அமைப்பாளர் உள்ளிட்ட 8 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஊர்காவற்துறை மெலிஞ்சிமுனை நாரயம்பதி மாதா தேவாலயத்தில் இருந்த சுமார் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான மாதா சிலையை அடித்து உடைத்து உள்ளார்கள்.

தேவாலயத்திற்கு அருகில் நேற்று முன்தினம் அரசியல் கட்சியின் அமைப்பாளரின் தலைமையில் சுமார் 20 பேர் கொண்ட கும்பல் ஒன்று மது விருந்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சற்று நேரத்தில் நிறை போதையில் தேவாலயத்திற்கு சென்றவர்களுடன் முரண்பட்டு, அவர்களை தகாத வார்த்தைகளால் பேசியுள்ளனர்.

பின்னர் தேவாலயத்தினுள் அத்துமீறி மதுபோதையில் புகுந்து , இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட சுமார் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான மாதா சிலையை அடித்து உடைத்து, தள்ளி விழுத்தியுள்ளனர். அத்துடன், தேவாலயத்தினுள் காணப்பட்ட ஏனைய பொருட்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தேவாலய நிர்வாகத்தினரால், ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் அரசியல் கட்சியின் தீவக அமைப்பாளர் உள்ளிட்ட 08 பேரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் ஏனையவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (நி-8-33-104)

# கிளி, துணுக்காய் கல்வி வலயங்களில் ஆசிரியர் பற்றாக்குறை

### ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர்

(தருமபுரம்)

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை மற்றும் துணுக்காய் கல்வி வலயங்களில் பாரிய அளவிலான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் விசேடமாக விஞ்ஞானம் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் போன்ற பாடங்களுக்கு அதிகமாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி தெற்கு வலயக்கல்விப் பணிமனைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு இருந்த நிலையிலேயே அவர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இதன்போது அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவிக்கையில்,கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை மற்றும் துணுக்காய் கல்வி வலயங்களில் பாரிய அளவிலான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதில் விசேடமாக விஞ்ஞானம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பவியல் போன்ற பாடங்களுக்கு அதிகமாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

இது மட்டுமின்றி சில பாடசாலைகள் நடத்தமுடியாத அளவிலே ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதற்கு ஓர் தீர்வும் வழங்கப்படாத நிலைமை காணப்படுகின்றது. கிளிநொச்சி வலயத்தில் மாத்திரம் 75 பேர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர்.

ஆனால் 35 புதிய ஆசிரியர்களே அங்கு கடமைக்கு திரும்பி வந்துள்ளனர். இதே போன்று முல்லைத்தீவு துணுக்காய் வலயம் போன்ற பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது. அது மட்டுமின்றி கல்வியை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான வளங்களும் பற்றாக்குறையாக காணப்படுகின்றன.

வடமாகாண ஆளுநருக்கு இது தொடர்பான முழுமையான அதிகாரங்கள் காணப்படுகிறது. எனவே இதற்கான உரிய தீர்வினை அவர்களே எடுக்க வேண்டும் எனவும் இவ்விடயம் தொடர்பாக ஆராய்வதற்கே கிளிநொச்சி பகுதிக்கு விஜயம் செய்ததாகவும் அவர் தெரிவித்தார். (8-316)

# மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் அழிப்பு

(நெளுக்குளம்)

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட முத்தையன் கட்டுப் பொது சுகாதார பிரிவு முத்தையன்கட்டு பகுதிகளில் உள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் வணிகங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் திடீர் பரிசோதனை நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த நடவடிக்கையில் முத்தையன்கட்டு வலதுகரை, முத்தையன்கட்டு இடதுகரை பகுதிகளில் உள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் வணிகங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிப்பு செய்யப்பட்டதுடன் சட்டநடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. (8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு புதிய வீடுகள் நிர்மாணம்

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக 3,000 புதிய வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னர் புதிய வீடு களின் நிர்மாணப்பணிகளை நிறைவு செய்யவுள்ளதாக நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள கிராம உத்தியோகத்தர்கள் மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறுபவர்களின் குடும்பங்களுக்காக இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இதற்காக மக்களின் உதவிகளும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பி.சரத் தெரிவித்தார். (நி)

# பாடசாலைகளை மூடுவதற்கு முயற்சிக்க வேண்டாம்!

## முன்னாள் எம்.பி எச்சரிக்கை



(கொழும்பு)

கல்வி மறுசீரமைப்பு என்ற பெயரில் எந்தவொரு பாடசாலையையும் மூடுவதற்கு முயற்சிக்க வேண்டாம் என அரசாங்கத்தை வலியுறுத்துவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

10 மாதங்களில் எவ்வாறு கல்வி மறுசீரமைப்பினை முன்னெடுப்பார்கள்? 20 ஆண்டுகளாக கல்வி மறுசீரமைப்பிற்கு எதிர்ப்பினை வெளியிட்ட இவர்கள், எமது ஆட்சி காலத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களையே தற்போது நடைமுறைப்படுத்துகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கல்வி மறுசீரமைப்பு யோசனைகள் முன்வைக்கப்பட்ட போது இவர்கள் வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சித்த சந்தர்ப்பங்களிலும் அவர்கள் அவற்றுக்கு வாய்ப்பளிக்கவில்லை.

இந்த அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிப்பவர்கள் கடந்த காலங்களில் நாட்டுக்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்தியவர்களாவர்.

ஆனால் இன்று அவர்கள் எம்மால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எமக்கு அழைப்பு விடுக்கின்றனர்.

பாடசாலைகளை மூடுவது தொடர்பிலும் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். எமது ஆட்சி காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கவில்லை.

எனவே இந்த அரசாங்கமும் எந்தவொரு பாடசாலையையும் மூடுவதற்கு முயற்சிக்க வேண்டாம் என அவ் வலியுறுத்துகின்றோம் என அவர் தெரிவித்தார். (நி)

## வெளிநாடுகளிலுள்ள

# இலங்கை குற்றவாளிகளுக்கு சிவப்பு அறிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் மறைந்திருக்கும் 67 இலங்கை குற்றவாளிகளுக்கு சர்வதேச காவல்துறையின் சிவப்பு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நாடு கடந்த குற்றவியல் வலையமைப்புகளுக்கு எதிரான தீவிர நடவடிக்கையின் ஒரு பகுதியாக, குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்திருக்கும் நபர்களில் சிலர் போலி கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி இருப்பதாகவும் இதனால் அவர்களின் சரியான இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பது கடினமாக இருப்பதாகவும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இருப்பினும் அவர்களில் பலர் தற்போது எந்தெந்த நாடுகளில் பதுங்கியிருக்கிறார்கள் என்பதை புலனாய்வுத்துறை வெளிப்படுத்தியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி அவர்களைக் கைது செய்து நாடு கடத்துவதை எளிதாக்குவதற்காக இலங்கை அரசாங்கம் தற்போது அந்த நாடுகளின் வெளியுறவு அமைச்சுகளுடன் நெருக்கமாகப் பணியாற்றி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதங்களில் சுமார் 20 சந்தேக நபர்கள் ஏற்கனவே வெற்றிகரமாக இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திரு மணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-076 682 7368
No.139, Main Street Jaffna.
யாழ். நீதிமன்றத்துக்கு அருகாமையில்
(முன்பதிவு செய்து வரவும்)
(4826)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3332

### சிபி




### தமிழ்




### யதுராஜ்




### யுவராஜ்




### இனியா




### கவிதா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும் நன்னடத்தையுமே ஒரு மனிதனை நல்லவனாக்குகின்றன. – அரிஸ்ரோட்டில்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## மானிட வாழ்வை துன்பப்படுத்தும் கல்வி முறை வேண்டாம்

கல்வியின் இலக்கு என்ன என்பது பற்றி அறிஞர் பெருமக்கள் பலரும் கூறியுள்ளனர். அவர்கள் கூறிய அத்தனை கருத்துக்களையும் எடுத்து ஆராயும்போது, கல்வியின் இலக்கு மானிடப் பண்புமிக்க மனித சமுதாயத்தை உருவாக்குவது என்ற உண்மை உணரப்படும்.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை மனித விழுமியங்களைக் கந்தறுத்து பணப் பொருளாதாரத்தை நோக்கிய இலக்குடன் கற்றல் செயற்பாடுகள் நடந்தாகின்றன.

இதன் விளைவாக மருத்துவர் அல்லது பொறியியலாளர் என்ற நினைப்போடு பிள்ளைகளைக் கல்வியில் ஈடுபடுத்துகின்ற மிக மோசமான நிலைமை நம் மண்ணில் புரையோடியுள்ளது.

உண்மையில் இந்த உலகில் வாழ்வதற்காக எத்தனையோ தொழிற்துறைகள் உள்ளன. ஆனால் அவை பற்றி சிந்திக்காமல், மருத்துவர் அல்லது பொறியியலாளர் ஆக ஆக்குவது என்று நினைக்கின்ற பெற்றோர்கள், தமது பிள்ளைகளுக்கு அழுத்தம் கொடுக்கின்றனர்.

ஆம், தனது பிள்ளை என்னவாக ஆக வேண்டும் என பெற்றோர் தீர்மானித்துவிட்டு, அதனை நோக்கி பிள்ளையை ஈடுபடுத்தும்போது பிள்ளையின் விருப்பம், அவர்களது இயலுமை, அவரிடம் இருக்கக்கூடிய ஆற்றல்கள் பற்றிய எந்தச் சிந்தனையும் இல்லாமல் போகிறது.

இதன் காரணமாக அநேகமான மாணவர்கள் கல்வியில் தோல்வி காண்கின்றனர். கிடைத்த சந்தர்ப்பத்தை – சாதனை படைக்கக் கூடிய ஆற்றலை இழந்து விரக்திக்கு ஆளாகின்றனர்.

மாணவர்களிடையே ஏற்படுகின்ற விரக்தியானது, மிகமோசமான விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

இங்குதான் பொருத்தமான கல்வி முறைமை அவசியமாகிறது.

உண்மையில் எங்கள் நாட்டின் கல்வியானது மாணவர்களை வதைக்கிறது. அவர்களை விரக்தியின் பாதைக்கு இட்டுச் செல்கிறது.

இதனையே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கடந்த 24ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின்போது குறிப்பிட்டிருந்தார்.

ஆம், இன்றைய சமகாலத்தில் பொருத்தமான கல்வித் திட்டம் தேவைப்படுகிறது.

இதை அமுல்படுத்தும் பொருட்டு கல்விச் சீர்திருத்தம் ஏற்படுத்தப்படும் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

உண்மையில் எங்கள் நாட்டில் இனவாதத்தை ஏற்படுத்துவதில் எங்களிடம் இருந்த கல்வி முறைமையும் வகிபங்காற்றியுள்ளதென்பதை மறுப்பதற்கில்லை.

குறிப்பாக வரலாற்றுப் பாடத்தைக் கல்வியில் புகுத்தியவர்கள். அதனூடு தமிழர்களின் வரலாற்றை இருட்டடிப்புச் செய்து சிங்கள வரலாற்றை முதன்மைப்படுத்தினர்.

ஆக, வரலாற்றுப் பாடத்தினூடாக பேரினவாத நஞ்சு மாணவச் செல்வங்களிடம் விதைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வரலாற்றுப் பாடத்தை விலக்குகின்ற நடவடிக்கை ஏற்புடையதாகும்.

ஆக, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவர்களின் அரசாங்கம் மனிதநேயத்தை வளர்த்தெடுக்கும் கல்வி முறையை அமுல்படுத்த வேண்டும். இது காலத்தின் தேவையாகும்.

# மாகாண சபைத் தேர்தலை அநுர அரசு உடன் நடத்த வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்து

(கொழும்பு)

மாகாணசபை முறைமையென்பது வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்பாகும். எனவே, அத்தேர்தலை நடத்தி மக்களுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து பணியை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம்மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு அரசு முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

மக்கள் பிரதிநிதிகளின் வேலையை அரசாங்க அதிகாரிகளுக்கு செய்ய முடியாது. எனவே மக்கள் பிரதிநிதித்துவம் அவசியம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளுக்கு அஞ்சியா மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் அரசாங்கம் பின்வாங்குகின்றது என்ற சந்தேகம் எழுகின்றது.

முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுகின்றோம்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கிய ஒரு வாய்ப்புதான் மாகாணசபை முறைமையாகும்.

எனவே வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து சபைகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். மக்களின் ஜனநாயக உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் நளின் பண்டார எம்.பி. குறிப்பிட்டார். (ம-7)

## பெயர்ப் பலகைகளுக்கு ரூ.2.4 மில்லியன் செலவு

### கோபா குழுவில் வெளியான தகவல்

809 மாகாணப் பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக மாற்றுவதற்காக பெயர்ப் பலகைகளுக்கு மாத்திரம் 2.4 மில்லியனுக்கும் அதிகமான பணம் செலவிடப்பட்டுள்ளதாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) தெரியவந்துள்ளது.

அதன்படி இந்த 809 பாடசாலைகளும் பெயரளவில் மட்டுமே தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சமீபத்தில் கல்வி அமைச்சின் அதிகாரிகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய முன்னிலையான போதே இந்த விடயங்கள் வெளியாகியுள்ளன.

மேலும், கடந்த அரசாங்கத்தின் போது செயற்படுத்தப்பட்ட தேசிய பாடசாலை எண்ணிக்கையை ஆயிரமாக அதிகரிக்கும் திட்டம் மற்றும் இராஜாங்க அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட 72 திட்டங்கள் தொடர்பாக 3 மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## அரசியல் கருத்தரங்கு

சிங்களப் பேரினவாதிகளால் அரச அனுசரணையுடன் திட்டமிட்டு தமிழர்களுக்கு எதிராக அரங்கேற்றப்பட்ட கறுப்பு யூலை பயங்கரவாதப் படுகொலையில் பலியான எம் உறவுகளின் நினைவாக பகிரங்க அரசியல் கருத்தரங்கானது இன்று ஞாயிற்றுக் கிழமை (27) மாலை 03.00 மணியளவில் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையிலுள்ள வை.எம்.சி.ஏ மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சிரேஸ்ட சட்டத்தரணி [illegible] நெறியாளுகையின் கீழ் நேற்று - இன்று - நாளை எனும் தலைப்பில் இடம் பெறும் இப்பகிரங்க அரசியல் கருத்தரங்கில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், கஜேந்திரகுமார், சட்டத்தரணிகளான கலாநிதி குமரகுருபரன், குகனேஸ்வரன், அரசியல் சமூக செயற்பாட்டாளர் சிவமோகன்,முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் ஆகியோர் கருத்தாளர்களாக கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (ம-7)

## சூதாட்டத்தில் ஈடுபட்ட பதினாறு பேர் கைது

களுத்துறை வாதுவைப் பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 13 பெண்கள் உட்பட 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாதுவைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து பணம் உள்ளிட்ட மேலும் பல பொருட்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர். (ம-7)

முல்லைத்தீவு கொக்கிளாயில்

## கடற்தொழிலுக்குச் சென்ற இளைஞன் மாயம்; தேடுதல் தீவிரம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்கிளாய் கடலுக்கு மீன் பிடிப்பதற்காகச் சென்ற இளைஞன் ஒருவர் மாயமான நிலையில் அவரைத் தேடும் பணி தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு கொக்கிளாய் கடலிற்கு நேற்று முன்தினம் (25) அதிகாலை 4.30 மணியளவில் கடற்தொழிலுக்கு 5 பேர் சென்ற நிலையில் ஒருவர் மாயமாகியுள்ளார்.

தொழிலுக்கு போய் கடலில் இறங்கியவருக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலையில் தற்போது வரை கிராம மக்கள் மற்றும் கடற்தொழிலாளர்கள் இணைந்து தேடிக் கொண்டு இருக்கிறார்கள்.

குறித்த சம்பவத்தில் கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் இருந்து தொழிலினை மேற்கொண்டுவரும் பொன்னம்பெருமகே ஜெகான் நதிஅருண் என்னும் 23 வயது இளைஞனே மாயமாகியுள்ளார்.

குறித்த இளைஞன் தொடர்பாக கொக்கிளாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு பதிவு செய்தும் இதுவரை அவ் இடத்திற்கு பொலிஸார் வருகை தரவில்லை என்று காணாமல் போன இளைஞனின் தந்தை தெரிவித்துள்ளார்.

(ம-7,299)

## ஆவணப்படம் வெளியீடு

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் புகழ் பூத்த முன்னாள் விளையாட்டுத்துறை ஆசிரியை செல்வி சரோஜினி தர்மலிங்கம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டமானது இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 03.30 மணியளவில் யாழ்ப்பாணம் வேம்படி வீதியிலுள்ள டிரிம்பர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது ஆசிரியரது வாழ்க்கை வரலாற்றை நினைவு கூறும் வகையில் ஆவணப்படமும் அவரிடம் கற்ற மாணவர்களால் வெளியிட்டப்படவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கூரை இடிந்து விழுந்து விபத்து; 7 மணவர்கள் பலி

## இந்தியாவில் துயரம்



(டில்லி)

இந்தியாவின், ராஜஸ்தான் மாநிலம் ஜலாவர் மாவட்டம் பொப்லொடி பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை பாடசாலை ஒன்றில் மேற்கூரை திடீரென இடிந்து விழுந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் பாடசாலை வகுப்பறைகளில் இருந்த மாணவ-மாணவியர், ஆசிரியர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், இந்த கட்டட விபத்தில் 7 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும், படுகாயங்களுடன் மீட்கப்பட்ட 28 மாணவ, மாணவியர் அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மாணவ, மாணவியரில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

பாடசாலை கட்டடத்தின் மேற்கூரை இடிந்து விழுந்து விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (நி)

# தமிழில் உறுதிமொழியுடன் பாராளுமன்றில் கமல்ஹாசன்



(சென்னை)

நடிகரும், மக்கள் நீதி மய்யம் தலைவருமான கமல்ஹாசன் நேற்று முன்தினம் மாநிலங்களவை உறுப்பினராகப் பதவியேற்றுக்கொண்டு பாராளுமன்றத்தில் அறிமுகமானார்.

மூத்த நடிகர் கமல்ஹாசன் தமிழில் உறுதிமொழி ஏற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டபோது சக பாராளுமன்ற உறுப்பினர்களின் பலத்த கரகோஷம் சபையில் எழுந்தது.

கமல்ஹாசன் மாநிலங்களவையில் நுழைந்தது அவரது அரசியல் வாழ்க்கையில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது.

ஏனெனில் அவர் முதல் முறையாக தேசிய சட்டமன்றப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்.

69 வயதான அரசியல்வாதி ஜூன் 12 அன்று தி.மு.க தலைமையிலான கூட்டணியின் ஆதரவுடன் மாநிலங்களவைக்குப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். (நி)

# பாலஸ்தீன தேசத்தை அங்கீகரிக்கின்றது பிரான்ஸ்



(பாரிஸ்)

பாலஸ்தீன தேசத்தை பிரான்ஸ் அங்கீகரிக்கவுள்ளதாக அந்த நாட்டின் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக பதிவொன்றில் இதனைத் தெரிவித்துள்ள அவர் நியூயோர்க்கில் அடுத்தமாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் கூட்டத்தில் இந்த விடயம் குறித்த அறிவிப்பு வெளியாகும் என தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் நீதியான நிரந்தர சமாதானம் என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அர்ப்பணிப்பின் அடிப்படையிலேயே இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்தம் மற்றும் அனைத்து பயணக்கைதிகளும் விடுதலை ஆகியவற்றிற்கு அழைப்பு விடுத்துள்ள அவர், நாங்கள் பாலஸ்தீன தேசத்தை கட்டியெழுப்ப வேண்டும், அதன் நம்பகத்தன்மையை ஏற்றுக்கொண்டு, அதனை இராணுமயப்படுத்தலில் இருந்து விடுவித்து, இஸ்ரேலை முழுமையாக அங்கீகரிப்பது பிராந்தியத்தில் உள்ள அனைவரினதும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த உதவும் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# ஹமாஸ் குழுவின் தலைவர்கள் வேட்டையாடப்படுவார்கள்

## அமெரிக்க ஜனாதிபதி எச்சரிக்கை



(வோஷிங்டன்)

ஹமாஸ் படையினர் இறக்க விரும்புகிறார்கள். அமைதியை நிலைநாட்ட எந்த ஆர்வமும் காட்டவில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் படையினருக்கு இடையே போர் நடந்து வரும் நிலையில் காசாவில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதில் பாலஸ்தீனர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பேற்ற முதல் நாளில் இருந்து, ஹமாஸ்- இஸ்ரேல் இடையே நடந்து வரும் போரை முடிவுக்கு கொண்டு வர தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில், அமெரிக்க ஆதரவுடன் கூடிய போர் நிறுத்தத் திட்டத்தை ஹமாஸ் நிராகரித்த நிலையில் இது குறித்து டொனால்ட் ட்ரம்ப் கருத்து தெரிவித்துள்ளார்.

இதில், ஹமாஸ் போராளிக் குழுவிற்கு அமைதியை நிலைநாட்ட எந்த ஆர்வமும் இல்லை எனவும் ஹமாஸ் உண்மையில் ஒப்பந்தம் செய்ய விரும்பவில்லை எனவும் அவர்கள் இறக்க விரும்புகிறார்கள் என்றும் தான் எண்ணுவதாகவும் கூறியுள்ளார்.

அனைத்து பிணைக் கைதிகளையும் விடுவித்த பின்னர் என்ன நடக்கும் என்று அவர்களுக்கு தெரியும் எனவும் இதனால் பிணைக் கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தங்களை ஹமாஸ் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை எனவும் ஹமாஸ் குழுவின் தலைவர்கள் இப்போது வேட்டையாடப்படுவார்கள் எனவும் டொனால்ட் ட்ரம்ப் இதன்போது மேலும் எச்சரித்துள்ளார். (நி)

# கம்போடிய எல்லையில் இராணுவ சட்டம் அமுல்

## தாய்லாந்து எடுத்த முடிவு

(தாய்லாந்து)

தாய்லாந்து மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான நில எல்லை விவகாரம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் நிலையில், கம்போடியாவின் எல்லையில் உள்ள பகுதிகளில் தாய்லாந்து இராணுவச் சட்டத்தை அமுல்படுத்துவதாக அறிவித்துள்ளது.

கம்போடியாவின் எல்லையில் உள்ள தாய்லாந்தின் 8 மாவட்டங்களில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை முதல் இராணுவச் சட்டத்தை அமுல்படுத்துவதாக தாய்லாந்து இராணுவம் அறிவித்துள்ளது.

இதற்கிடையில், கம்போடியாவுடனான எல்லை மோதல்களில் பலர் உயிரிழந்துள்ளதாகவும் இது யுத்தமாக மாறக்கூடும் என்றும் தாய்லாந்தின் தற்காலிக பிரதமர் பும்தம் செச்சாயாசாய் எச்சரித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான மோதலையடுத்து தாய்லாந்து தனது எல்லைப் பகுதிகளில் இருந்து ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை வெளியேற்றியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அத்துடன் கம்போடிய எல்லையில் உள்ள 6 பாதுகாக்கப்பட்ட பகுதிகளை மூட தாய்லாந்தின் இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகமும் உத்தரவிட்டுள்ள நிலையில், அந்த பகுதியில் உள்ள 6 தேசிய பூங்காக்களை மூட தாய்லாந்து நடவடிக்கை எடுத்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா அலுவலகம்...

கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகம் முன் போராட்டம் ஒன்று முன்னெடுக்கபட்டிருந்தது.

வடக்கு, கிழக்கு தமிழர்கள் கோரும் சர்வதேச நீதி பொறிமுறையூடான நீதி கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து, மாண்புமிகு மலையக மக்கள் சிவில் சமூகக் கூட்டிணைவு கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக் காரியாலயத்திற்கு முன்பாக நேற்றுச் சனிக்கிழமை காலை குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தது. (ம-7)

## பொலிஸ் பாது...

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதி மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் நல்லூர் திருவிழாவுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று மணல் விநியோகிக் கப்பட்டது.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவுக்கு வருடந்தோறும் குறிப்பிட்ட மணல் வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் இருந்து பிரதேச மக்களின் அனுமதியுடன் வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் அம்பன் பகுதியில் தொடர்ச்சியாக மணல் அகழ்வது சூழல் சமநிலையைப் பாதிப்பதோடு தொடர்ச்சியாக அம்பன் கிழக்குப் பகுதியில் மட்டும் மணல் அகழக்கூடாது எனத் தெரிவித்து பிரதேச மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

மணல் விநியோகம் தொடர்பாக எழுந்த முறுகலையடுத்து பொலிஸ் பாதுகாப்புடன் நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு மணல் விநியோகிக்கப்பட்டது.

மேலும் வடமராட்சி கிழக்கு அம்பன் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் தனது கிராமத்தில் மணல் அகழ்வு மேற்கொள்ள வேண்டாம் எனத் தீர்மானம் நிறைவேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,104)

## நாடு முழுவதும்...

யின்போது 24,281 பேர் சோதனை செய்யப்பட்டனர்.

மேலும் 7,240 மோட்டார் சைக்கிள்கள் உட்பட 10,175 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதன்படி இந்த நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றங்களுக்காக 1,455 பேர் கைது செய்யப்பட்டனர். அத்தோடு 374 கிராம் 336 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 218 கிராம் 281 மில்லிகிராம் ஹெரோயின் உள்ளிட்ட ஏராளமான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்தச் சோதனைகளின்போது குற்றங்களில் நேரடியாக ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்ட 17 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பல்வேறு குற்றங்களுக்காகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 408 பேரும் இந்தச் சோதனை நடவடிக்கையின்போது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். (ம-7)

## தமிழின...

தேச நீதி கோரிய போராட்டமானது யாழ்ப்பாணம் செம்மணி புதைகுழிக்கு அண்மித்த பகுதியான - நல்லூர் வீதி வளைவு அமைந்துள்ள பகுதியிலும் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தி, இனப்படுகொலைக்கு நீதி வேண்டி கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளர் மு.கோமகன், காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள், சமூக மட்ட அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவில் மாவட்டச் செயலகம் முன்பாகவும் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைத் தவிசாளர் லோகேஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஜூட்சன், வடக்கு, கிழக்கு சமூக இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அன்புமணி லவகுசராசா, மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் உறுப்பினர்கள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

**வவுனியா**

தமிழ் மக்கள் மீது திட்டமிடப்பட்ட வகையில் நடத்தப்பட்டு வரும் இன அழிப்பிற்கு சர்வதேச நீதி கோரிய போராட்டமானது வவுனியா புதிய பேருந்து நிலையப் பகுதிக்கு முன்பாகவும் இடம்பெற்றது.

இதன்போது பன்னாட்டு நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி கையெழுத்தும் திரட்டப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் வடகிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள், சமூக செயற்பாட்டாளர்கள், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

**கிளிநொச்சி**

வடக்கு, கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச பொறிமுறையை வலியுறுத்தி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலும் கிழக்கு மாகாணத்திலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (ம-7,33,104,250, 299,316)

## தையிட்டி...

கட்டப்பட்ட விகாரையை அகற்றக் கோருவது நல்லிணக்கத்துக்குப் பாதகமா? என கஜேந்திரகுமார் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும் பேரினவாதம் எப்போதும் தம்முடைய நிகழ்ச்சி நிரலை மாத்திரமே பார்ப்பதாக கஜேந்திரகுமார் குறிப்பிட்டார்.

தென்னிலங்கையில் வீதிகளை நிர்மாணிப்பதற்காகவும் மற்றும் வேறு பல விடயங்களுக்காகவும் சாதாரணமாக விகாரைகள் அகற்றப்பட்டுள்ளதாகவும், எனவே தையிட்டி விகாரையை அகற்றக்கோருவதனை மாத்திரம் ஏன் நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் விடயமாகப் பார்க்க வேண்டும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வியெழுப்பியுள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2025.07.26 — சீட்டிழுப்பு இலக்கம் 5902 — B 2 9 6 9 1 2
அத சம்பத — B 6 9 1 2 — சீட்டிழுப்பு இலக்கம் 477
சுப தவசக் — 2025.07.26 — 0016 — கன்னி 24 26 32 48
தன நிதானய — திகதி - 2025.07.26 — சீட்டிழுப்பு இலக்கம் - 1932 — C 04 10 20 76 C — 30349
மெகா பவர் — திகதி 26/07/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2250 — H 26 27 31 34 66
ஜய — திகதி 2025.07.26 — 0170 — Q 6 8 1 9
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4144 — சீட்டிழுப்பு திகதி 26.07.2025 — Y 04 13 31 54 — Y
ஹந்தஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.07.26 — சீட்டிழுப்பு இலக்கம் 1211 — மேடம் 15 31 50 60 மேடம் — 06965 — 28
உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி தன சம்பத — 26.07.2025 — வெற்றி வாரம் 0610 — K 9 8 3 7 4 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,637,987.60
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2876 — சீட்டிழுப்பு திகதி 2025.07.26 — தினம் சனிக்கிழமை — 11 38 72 76 N — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,155,740.00
சனிதா — திகதி 26.07.2025 — வெற்றி வாரம் 5037 — 16 49 54 69 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,064,958.00
சசிரி — 734 — 26.07.2025 — சனிக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 05 22 31 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.2,000,000.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4588 — சீட்டிழுப்பு திகதி 26.07.2025 — தினம் சனிக்கிழமை — 18 19 24 31 கும்பம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,921,439.20
லக்பிம — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — A 03 44 64 70 72 — 2052 — 26.07.2025 சனிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.584,454,220.20
அத கோடிபதி ADA KOTIPATHI — சனிக்கிழமை — வெற்றி வாரம்: 2702 — சீட்டிழுப்பு திகதி: 2025.07.26 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,799,637.60 — 26 52 59 69 E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும்
Pharmacy
ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
(1373)

**076 937 3140**

---

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3950/-
11-16 Kg 2690/-
21-27 Kg 2490/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- | France 11Kg - 2200/- | Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2470/- | Australia 11Kg - 2130/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237
(C-3509)

---

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Oxford 8 Sri தொடர் இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு.
(4900)

தொடர்புகளுக்கு

**077 978 9467**
**075 840 4439**

---

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு**
**076 636 3378 | 076 097 3127**

---

## வேலையாட்கள் தேவை

கணக்காளர்: களஞ்சிய கணக்குகள்/ இருப்புகள் சரிபார்க்க A/L படித்த கணினி அறிவுள்ள ஆண்கள்/ பெண்கள் தேவை.

குறிப்பு :
40 வயதிற்கு மேற்பட்ட அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
திருநெல்வேலியை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
(4903)

தொடர்பு : **076 328 0381**

---

## வீடு வாடகைக்கு

அரியாலை நொத்தாரிசு lane இல் உள்ள புது வீடு வாடகைக்கு உண்டு. (நாவலர் வீதிக்கு அருகாமையில்)
2 அறை, hall, kitchen, attached Bathroom உள்ள சிறிய வீடு.
அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. (C-221)

**074 075 1732**
**076 719 2814**

---

## ICT வகுப்புக்கள்

Personal Classes
O/L & A/L
ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலம் கற்பிக்கும் இடங்கள்
யாழ்.நகர், கிளிநொச்சி
(1362)

**075 828 2528**

---

## Class Room Available For Tution

சுன்னாகம் K.K.S வீதிக்கு அருகாமையில் அமைந்திருக்கும் கல்வி ஸ்தாபனம் ஒன்றில் சகல வசதிகளும் கொண்ட வகுப்பறைகள் உள்ளன.
பெரிய/ சிறிய குழு வகுப்புக்களுக்கு மிகவும் உகந்தது.
(1370)

One class Room : 50 Seats
3 Class Room : 15 Seats
(A/L, O/L வகுப்புக்கள்)

**076 897 6665/ 070 686 7695**

---

## A1 Sannithy Academy

Kokkuvil (Sabapathy lane)

**English paper Classes For university, O/L, A/L Student**

SPOKEN with GRAMMAR
(4901)

SK.Manokaran **071 658 9999**

---

## தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம் மற்றும் தீவுப்பகுதிகளில் வீடு, காணி விற்கவுள்ள உரிமையாளர்கள் மற்றும் வாங்கவுள்ளவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
(1367)

**076 311 9485**
**076 050 3863**

---

## பணியாளர் வெற்றிடம் (Delivery Boy)

PVC நீர்க்குழாய்கள் மின்சாரப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு அனுபவமுள்ள விநியோக உதவியாளர் தேவை. ஓரளவு ஆங்கிலம் வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- EPF/ETF கொடுப்பனவு வழங்கப்படும்.
- நிரந்தரத் தொழில்.

சுயவிபரக் கோவையை நேரில் வருகை தந்து சமர்ப்பிக்கவும். (4906)

ESS JEY ELECTRICALS
No.09, STANLEY ROAD, JAFFNA 021 222 2564/ 021 222 7430

---

## வேலைவாய்ப்பு

வீடு வீடாக மற்றும் நிகழ்வுகளில் Uber App Download மற்றும் துண்டுப்பிரசுரம் விநியோகம் செய்யக்கூடிய வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு (116)

**070 755 5755**

---

## வேலையாட்கள் தேவை

DSR. (Distributor Sales Rep)
A/L படித்த ஆண்கள்
விநியோகிஸ்தர் சார் விற்பனை முகவர் வேலைக்குத் தேவை.
(4903)

**076 328 0381**

---

## விற்பனைக்கு

- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 32 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட இரண்டு கடைகளும்
- யாழ்.மின்சார நிலைய வீதியில் CTB தரிப்பிடத்திற்கு பின்பாக 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 2 மாடிக் கடையும்
- யாழ்.மின்சார நிலைய வீதி முதலாம் ஒழுங்கையில் 2½ பரப்பில் அமைந்த காணியும் வீடும்
- யாழ்.பலாலி வீதியில் வீனஸ் ஆஸ்பத்திரிக்கு அண்மையில் 4 பரப்பில் அமைந்த வீடும் காணியும்
- யாழ்.K.K.S வீதியில் தாவடி சந்திக்கு அண்மையில் 2 பரப்பில் அமைந்த புதிய மாடி வீடும், 6 பரப்பில் அமைந்த காணியும் வீடும்
- யாழ்.K.K.S வீதியில் தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 10 பரப்பில் அமைந்த அதி நவீன கட்டிடமும் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு

(C-3508)

**077 723 2535**

---

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 209/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 241/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 369/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1Kg அரலிய வெள்ளைப் பச்சை | - 220/= | |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2750/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 195/= | Max 3Kg |
| 1Kg கீரிச்சம்பா | - 258/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 899/= | |
| 1Kg கடலை | - 384/= | |
| 1Kg சோயா | - 330/= | |
| 01 அங்கர் யோகட் | - 45/= | ~~70/=~~ |

400g Anchor 1100/= Max 01



1Kg சவர்க்காரத் தூள் 280/= ~~320/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:- happy basket.lk
இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (1371)

Happy Supermarket
0777 8080 30

---

## நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பிகைக்கு ஆடிப்பூர விழா

அம்பிகையின் அடியார்களே!

28.07.2025 திங்கட்கிழமை நடைபெறவுள்ள அம்பிகையின் ஆடிப்பூர விழாவினை முன்னிட்டு அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்திச் சபையினர் வழமைபோல தாகசாந்தி (குடிநீர்,குளிர்பானம்) இன்றும், நாளையும் வழங்க அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

நயினாதீவு இந்து கலாசார
அபிவிருத்திச் சபை, நயினாதீவு
(C-3511)

---

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல வைத்தியசாலையானது பின்வரும் பதவிகளுக்காக தகுந்த ஊழியர்களை எதிர்பார்க்கின்றது.

- Human Resource Manager (HR) (மனித வள முகாமையாளர்)
- Media - Graphic Designer (மீடியா - கிராஃபிக் வடிவமைப்பாளர்)
- Operation Theatre Attendant
- OFFice Boy

குறிப்பு :
யாழ்.நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் உங்களது சுயவிபரக் கோவையினை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு 31.07.2025 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும். (4904)

**074 202 7318**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org